தென்மொழி

தமிழகத்தை வடநாட்டார் ஆள ஒப்பமாட்டோம்!

இந்தித்திணிப் பிலையெனினும்,
யாவருமே சமமெனினும்,இந்தி யாவில்
சொந்தமொழி சொந்தஇனம்
சொந்தப்பண் பாடு,கலை தம்மைப் பேணி
முந்தைவர லாற்றுநிலை
மொய்ம்பெல்லாம் வளர்க்கத்தடை இலையென் றாலும்,
செந்தமிழ்த்தாய்த் திருநாட்டைத்
தனிநாடாய்ப் பிரிப்பதைக்கை விடமாட் டோமே!

பார்ப்பனியம் இனநஞ்சைப்
பரப்புவதைக் கைவிடினும், வணிகக் கும்பல்
ஊர்ச்சுரண்டல் இல்லாமல்
உலகநலம் கருதிடினும் தமிழ கத்தைத்
தார்ப்பாய்ச்சுக் காரர்களாம்
வடநாட்டார் தாம்ஆள ஒப்ப மாட்டோம்!
ஆர்ப்பரிப்போம் செந்தமிழ்த்தாய்த்
திருநாட்டின் ஆட்சிதனி ஆட்சி என்றே!

உரிமையெனும் ஆட்சிநலம்,
உணவு(உ)டுக்கை உறையுள்நலம் யாவற் றுள்ளும்
பெரியநலம்; பெருமைநலம்;
பிறவியிலே உயர்ந்தநலம்—என்றே எண்ணிச்
சரிநிகர்மை, பொதுமையுணர்
வென்பவற்றை நிலைநாட்டும் தமிழ்த்தாய் நாட்டுப்
பிரிவினையே வேண்டுமென்றும்
பிறவெல்லாம் வீணென்றும் பேசு வோமே!

சுவடி: 22
ஓலை: 9

ஆசிரியர்
பெருஞ்சித்திரனர்

விலை
உருபா 1-2

நமக்கு வந்த மடல்கள்.

0: 1156: பேரன்புக்கும் பெருமதிப்பிற்குமுரிய ஐயா வணக்கம் !

தென்மொழி சுவடி 22 ஓலை 5 இல் தங்களின் 10-2-86ஆம் பக்கலிரவுத் தொலைக்காணி எழுத்துரை வெளியிடப்பட்டுள்ளதைப் படித்தேன். தமிழை வழிபாட்டு மொழி நிலையிலிருந்து மூவேந்தர் முழுஆட்சி மறைவுக்குப் பின்னர் வந்த சிற்றரசர்களின் அரவணைப்புடன் ஆரியம் அகற்றிக் காட்டிற்று. சமற்கிருதமே பூசனை மொழி என்றாயிற்று. இதற்குப் பல்லவர் போலும் தனித் தமிழரசர்களே துணை போயினர். சமற்கிருத நிலைப்படுத்தத்திற்குப் பார்ப்பனர் என்றென்றும் பல்லாற்றானும் முயன்று கொண்டேயிருக்கின்றனர். இவர்களுக்கு இறைவன் மேலிருக்கும் நம்பிக்கையைவிடத் தம்முடைய தாய்மொழி என எண்ணிக் கொண்டிருக்கும் சமற்கிருதத்தின் பாலுள்ள பற்றே மிகுதி. இந்து மதத்தின்பாலுள்ள பற்றை விடவும் சமற்கிருத மொழிப் பற்றே பெரிதெனத் தெரிகிறது. தமிழ் நாட்டிலுள்ள தாழ்த்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் ஆகியோர் இசுலாம் போலும் பிற மதங்கட்கு மாறினாலுங் கூடக் கோயிற் சிலைகட்கு முன்நின்று சமற்கிருத மந்திரங்களைத்தாம் தம் வாயிகளின்றும் வெளிப்படுத்திக் கொண்டிருப்பர். ஒருசில பணக்காரத் தமிழ ஏமாளியாகிலுங் கோயிலுக்கு வராமலா போய் விடுவர்! அவ்வளவு மொழி வெறி பிடித்தவர்கள் பார்ப்பனர்கள். அவர்கள் சமற்கிருதத்தைப் போற்றிக் கொள்ளும் அதே பொழுது தமிழ் அழிப்பு வேலைகளையும் தவறாமல் தவிராமற் செய்தே வருகின்றனர். இவர்கள்தாம் நம்மைப் பார்த்து மொழி வெறியினர் என்கின்றனர். தாம் யாது செய்கின்றோம் என்பதே தெரியாது தமிழக் குமுகத்திற் பிறப்பெடுத்த இரக்கத்திற்குரிய மேற்குலத்தார் அல்லது குடியானவர் (என்போர் எசமானோர் போன்றவர்கள்தாம் இவர்களும்) துணை போய்க் கொண்டிருக்கிறார்கள்.

இந்தப் பார்ப்பன வல்லாண்மை வளையத்தைத் தகர்த்துத் தமிழை வழிபாட்டு மொழியாக ஆக்க நினைக்கும் ஆட்சியினர்க்கும், அரசியல் தலைவர்கள், அறிஞர்கள், பொதுவினர் ஆகியோர்க்கும் தங்களின் அன்றையத் தொலைக்காணியுரை மிகவுந் துணைபுரியும். இதை நான் கண்டு கேட்கும் நல்வாய்ப்பைப் பெற்றேனல்லன்.

இதைக் கண்டு கேட்டவர்களில் ஒருவரான திரு. குறிஞ்சி வளவன் அவர்கள் குறிப்பிட்டுள்ளதுபோல், ஜப்பான் என்றும், சாஸ்திரி என்றும் பேசியிருப்பீர்களானால், நான் உள்ளபடியே மிகவும் மன வருத்தங் கொள்கின்றேன். ஆங்கில மொழியில் ஜப்பான் என எழுதப்படுவதால் தமிழிலும் அவ்வாறுதான் எழுதல் வேண்டுமா? ஒவ்வொரு மொழிக்கும் தனித்தனியான தன்மைகளிருக்கின்றன. அந்த வகையில் தமிழுக்கும் ஒரு தன்மையிருக்கிறது. தொல்காப்பியம் முதலிய இலக்கணங்கள் அத் தனித் தன்மைக்கு அரண்களாக நிற்கின்றன. பிற மொழிச்

(தொடர்ச்சி அட்டை 3ஆம் பக்கம் பார்க்க)



"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

(நிறுவனம் தி. பி. 1990 (1959))

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை,-முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனீயப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன் நிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்

புரப்பாளர்கள்: தென்மொழி முல்லைவாணன், தென்மொழி த. முத்துக்குமரனார், தென்மொழி ப. துரையரசன், தென்மொழி நா. இளமாறன், தென்மொழி பழநி-மகிழ்நன், தென்மொழி எசு.ஆர். பிரான்சிசு, தென்மொழி கா.இளமுருகன், தென்மொழி த. தேனியல் செபராசு, தென்மொழி அரசத்தொகையன், பாவலர். சா. சி. சுப்பையா, பாவலர். அ. பு. திருமாலனார், தென்மொழி த. அரிமா வளங்கோ. (தொலைபேசி : 847829)

(பெயரில்லாப் படைப்புகள் பொறுப்பாசிரியர் எழுதுவன.)

சுவடி 22] ௨0௧௭ கடகம் (ஆக-செப்-1986) [ஓலை 9

மொழி, இன, நாட்டுக் குழைக்கும்

பொதுநலத் தொண்டர்களுக்கு-6

தொண்டுள்ளம் என்பது, இயற்கையாகவே அமைய வேண்டிய ஓர் உணர்வுள்ளம். கலைஞர்க்கு எவ்வாறு கலையுணர்வும், வீரர்க்கு எவ்வாறு வீரவுணர்வும், துறவிக்கு எவ்வாறு பற்றற்ற துறவுள்ளமும் அமைந்திருக்கின்றனவோ, அவ்வாறே உண்மையான தொண்டர்க்குத் தொண்டுணர்வும்- இயற்கையாகவே அமைந்

திருத்தல் வேண்டும் உண்மையான தொண்டுணர்வு என்பதை அடையாளம் காணுதல் அரிது. போலிக் கலைஞரைப் போலவும், போலி வீரரைப் போலவும், போலித்துறவியைப் போலவும் போலித் தொண்டரும் உண்மைத் தொண்டரைப் போலவே காட்சியளிப்பர்; பேசுவர்; இயங்குவர். ஆனால், அவருக்கு அத் தொண்டால், ஏதாவது ஓர் இடர்ப்பாடு நேரிடுகையில், தடை வருகையில், இழப்பு நேர்கையில், இதை விட வேறு வகையில் ஊதியம் வருகையில், தாம் மேற்கொண்ட அத் தொண்டுப் பணியைக் கைவிட்டு விடுவார். அந்நிலையில்தான் போலித் தொண்டரை அடையாளங் காண இயலும்.

எனவே, உண்மைத் தொண்டர்க்கு இன்றியமையாத கீழ் வரும் பதினான்கு குணங்கள் கட்டாயம் தேவை. இவற்றுள் ஒன்று குறையினும், தொண்டின் முழுமை உணர்வில் குறைவுற்றவரா கவே கருதுதல் வேண்டும். பதினான்கும் நிறைவாக வாய்க்கப் பெற்றவர்களே மிகச் சிறந்த தொண்டர்களாகவும், அவர்க ளுள்ளும் முதிர்வுற்றவர்களே தலைவர்களாகவும் இருக்கத் தகுதி பெற்றவர்களாவார்கள்.

தொண்டுக்கான தகுதி நிலைகள்.

1. மிக ஆய்ந்து, பொது நலத்துக்கெனத் தாம் சிறந்ததெனத் தேர்ந்தெடுத்துக் கொண்ட ஒரு கொள்கையை, எந்த நிலையிலும், எவ்விடத்தும், எக்காலத்தும், எந்த ஒரு மாற்றுக் கொள்கைக் காகவும், அது செயற்பாட்டுக்கு மிக அரிது எனப் பின்னர் தெரிந்து கொண்ட நிலையிலும், அதைச்சிறிது சிறிதாகவோ, பகுதி யாகவோ, முழுவதுமாகவோ கைநெகிழ்க்காமை. (குறள்.1021)

2. எடுத்துக்கொண்ட கொள்கையைச் செயலுக்குக் கொண்டு வருவதையே தம் நீடிய வாழ்நாள் கடமையாகக் கொள்ளுதல், (குறள்: 1022)

3. இடையில் நேரும் ஏற்றத் தாழ்வுகளையோ, விளைவுகளையோ முடிவையோ பற்றிக் கவலை கொள்ளாமல், தொடங்கிய உறுதி யுடன் தொடர்ந்து கடமையாற்றுதல். (குறள்:1024)

4. பொது நிலைகளில் அறக்குற்றம் (நேர்மையிழத்தல், நம்பிக் கைக்கு மாறுபடல், வஞ்சகம் செய்தல், இரண்டகம் செய்தல், முதலியவை); பொருள் குற்றம்(பொதுப் பணத்தைக் கையாடல், தன்னலத்துக்கெனப் பொதுப் பணத்தைச்செலவிடல், பொறுப் பின்றிச் செலவு செய்தல், பணத்துக்கெனக் கொள்கையில் தாழல், விட்டுக் கொடுத்தல் முதலியவை); இன்பக்குற்றம் (காதல், காமம் விரும்பிக் கொள்கையை நெகிழ்த்தல், கைவிடல் ஒழுக்கங் கெடல், இன்ப நோக்கம் கொண்டு மனைவியையோ, உறவினர்களையோ பொதுச் செலவில் ஈடுபாடு கொள்ளவைத்தல் முதலியவை); அச்சக் குற்றம் (அச்சத்தின் பாற்பட்டுக் காட்டிக்

கொடுத்தல், மறை வெளிப்படுத்தல், கொள்கையை மாறல் முதலியவை) ஆகிய குற்றங்கள் நேராமல், மக்கள் நலம் ஒன்றே கருதுதல் (குறள்: 1025; 501)

5. துணிவாகச் சரியென்று பட்டதைச் சொல்லவும், சரியன்று என்றும், பிழையென்றும் உணர்ந்தவற்றைக் கடியவும், தாம் சரியென்று ஏற்றுக் கொண்டதைச் செய்வும் ஆன துணிவுடைமை. (குறள்:1026-669)

6. பொறுப்புச் சுமைகளையும், கடமைத் துன்பங்களையும் தாங்கிக் கொள்ளும் பொறுமையுடைமை. (குறள் 1027)

7. வெயில், மழை, பனி, குளிர், இரவு, பகல் முதலிய கால, நேரங்களைப் பாராமலும்; பழிகள், இழிவுகள், போட்டிகள், பொறுமைகள், தாழ்ச்சி வீழ்ச்சிகள், தோல்விகள், தொய்வுகள், ஏசல்கள், பூசல்கள் முதலியன வந்தவிடத்து மானம் கருதாமலும் கடமை செய்தல். (குறள் 1028)

8. கடமைச் செயல்களுக் கிடையில் வரும் அகப்புறத் துன்பங்களையும், துயரங்களையும் பொருட்படுத்தாமை. (குறள் 1029)

9. தொடக்கத்தில் கூட்டாக நின்று கொள்கையைத் தம்முடன் இணைந்து ஏற்றவர்கள், தம்மினின்று விலகி வேறுபடினும், தாம் கொள்கைக் கொருவராகவே நிற்க நேரினும், மனஞ் சோர்வுறாமல் கொள்கையை இயன்றவரை மேலெடுத்துச் செல்லும் திறன் உடைமை. (குறள் 814; 1027)

10. பொருளுக்கோ, பதவிக்கோ, புகழுக்கோ அவை வராவிடத்து ஆசையும் அங்காப்பும் அலைவும் கொள்ளாமலும், வந்தவிடத்து மயங்காமலும் அடிமையாகாமலும், அவற்றால் கொள்கை பழுதுபட்டுப் போகாமல் காக்கவும், தம் கடமைக்கு அவை கருவிகளே ஆம் என்றெண்ணும் உயரிய நோக்கம் கொண்டிருத்தல்.

11. தம்மொடு இணைந்து இயங்கியவர்கள் மாறுபடினும், வேறுபடினும் அவர்களின் நிலைகளைப் பழித்தும் இழித்தும், கடமையுணர்வுகளையும் காலத்தையும், அறிவு, உடல் முயற்சிகளையும் பாழடிக்காமல், தம் கொள்கையினின்று திசை திரும்பாத, திறம்பாத போக்கு.

12. எதனையும் எவரையும் நடுநிலையுடனும், அமைவுடனும், நம்பிக்கையுடனும், பொது நோக்காகக் கருதவும், பொதுப்பயன் நோக்கிச் செய்யவும் ஆகிய நேர்மை உடைமை.

13. தந்நலம் கருதாமையுடன், தேவையானவிடத்துப் பொது நலத்துக்காகத் தந்நலத்தைத் துறப்பவும் ஆன உணர்வு.

14. கொள்கைக்காக உயிர் விடவும் அஞ்சாத தனித்திறன் (குறள் 877.

இப் பதினான்கு தகுதிநிலைகளும் நிறைவுற்றவராகக் காணப் பெறுபவர் மிகவும் அரியவராகவே இருப்பர். தொண்டுக்கென முன்வரும்ஒவ்வொருவரும், இவற்றுள் சில அல்லது பல நிலைகளில் குறையுடையவராகவே இருப்பர். எனவே அவரவருக்குத் தக்க படி அத்தொண்டு நிலை அமையும். ''இவை முழுவதும் நிறைவுற்ற வராக இருப்பவர்கள் கிடைக்கும் வரை தொண்டு என்னாவது? அத்தகையவர்கள் கிடைக்கின்ற வரை தொண்டுப்பணி தொடங் கப்பெறாமல் கிடக்க வேண்டுமோ? மேலும் இத் தொண்டுக்குரிய தகுதிப்பாடுகளை உடனே அறியவும் வாய்ப்பில்லையே! காலப் போக்கிலன்றோ இவற்றின் தன்மைகள் உறுதிப்படுத்தப் பெறும்'' என்றெல்லாம் ஐய வினாக்கள் எழும், மேற்கண்ட தகுதி நிலைகளில் அவற்றுக்கு என்ன செய்வது? கிடைத்தவரையில் அல்லது சிலவேனும் பொருந்தியவர்களைக் கொண்டு தொண்டுதொடங்கப் பெற்றுப் படிப்படியாகக் குறையுள்ளவர்களை நிறையுள்ளவர்க ளாக வளர்த்தெடுக்கத்தான் வேண்டும். வேறு வழியில்லை,

அரசியலாயின், ஊதியம் கருதும் தொண்டர்கள் நிறையப் பேர் வருவர். பிற. மொழி, இன, நாட்டு நலத்தொண்டு இழப்பும் இடர்ப்பாடும் ஏதங்களும் மிகுந்ததாகையால், அத் தொண்டுக் கென வருவார் தொகை மிக மிகக் குறைவாகவே இருக்கலாம். வந்த அளவில் தொண்டு விளைவும் அந்த அளவிலே இருக்கும் என்பது வெள்ளிடை மலை. ஆனால், ஒரு தொண்டியக்கத்தைத் கட்டமைத்தவர் தாம் தம்பால் வரும் தொண்டர்களைப் பற்றி மிக எச்சரிக்கையுடன் இருத்தல் வேண்டும் இல்லெனில் வருகின்ற தொண்டர்களால் கொள்கைச் சிதைவும், இடர்ப்பாடும், மனத் துயரும், இழுக்குகளும், பழிகளும், பூசல்களும், இழப்புகளுந்தாம் எஞ்சும்.நம் முப்பத்தைந்தாண்டுகாலத் தொண்டுப் பணியின் பட் டறிவு இது. நம் நாட்டு மொழி, இன, நாட்டு நலத் தொண்டுக்கும், தொண்டர்களுக்கும் வெற்றி கிட்டாமைக்குரிய காரணமும் இது தான்.

இனி, இறுதியாகப் பொதுத் தொண்டுக்குத் தடையாயி ருக்கும் சில கூறுகளைப் பற்றியும் நாம் எண்ணிப் பார்த்து, அத் தடைகளை அகற்றிக் கொள்ளவும், அல்லது புறக்கணிக்கவும், அல்லது பொருட்படுத்தாமல் இருக்கவும் தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.

பொதுவாக நம் நாட்டைப் பொறுத்த வரையில் பொதுத் தொண்டுக்கு முதல் தடையாயிருப்பது நம் குடும்பங்களே! திரு மணம் ஆகாத இளைஞர்களாக இருப்பின், அவர்களின் பெற்றோர் கள், உடன்பிறந்தவர்கள், சுற்றத்தார்கள் முதலியவர்களும், திரு மணம் ஆனவர்களாக இருப்பின், அவர்களுக்குத் துணைவிய ராக வந்து வாய்த்தவர்களும் அவர்களின் பிள்ளைகளுமே முதல்

தடைகள். இது பற்றி இக்கட்டுரையின் முன்பகுதியில் ஓரளவு கூறப் பெற்றிருப்பினும், இங்கு இன்னும் சொல்ல வேண்டிய தேவை இருக்கிறது.

நாம் கண்ட அளவில் திருமணம் ஆகாத முன்பு, நல்ல பொது வுணர்வும், தொண்டுள்ளமும் வாய்க்கப் பெற்றவர்கள் திருமணம் ஆன பின்பு, தம் தொண்டுநிலையில் பல படிகள் தாழ்ந்து விடுகின் றனர்; அல்லது மாறி விடுகின்றனர். எச்சம் சொச்சம் இருக்கும் சில பொதுவுணர்வுக் கூறுகளும், அவர்களுக்கு ஓரிரு குழந்தைகள் பிறந்த பின்னர் அறவே பொது நிலையிலிருந்து கழன்று விடுகின் றன. இந்நிலை நம் நாட்டில், குறிப்பாகத் தமிழினத்தைப் பொறுத்தவரையில் நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து இளைஞர் களிடம் காணப்படுவதாகும். மீதி ஐவரிடம் மேலே கண்ட பதினான்கு தகுதி நிலைகளுள் பெரும்பாலானவை இருப்பதில்லை. இந் நிலைக்கு இவ்விளைஞர்களைக் குறை கூறிப் பயனில்லை. இவர் களின் அவல நிலைக்கு நம் நாட்டுக் குடும்ப அமைப்பே முதல் காரணமாக இருக்கிறது.

நம் நாட்டில் உள்ள கூட்டுக் குடும்ப அமைப்பு முறையும், சாதி அமைப்பு முறையும் தவறான, மூட மதக் கோட்பாடுகளுமே பொதுவுணர்வில் நாம் மேம்பட்டு முன்னேற முடியாமல் தடைக் கற்களாக உள்ளன.

நம் கூட்டுக் குடும்ப அமைப்பில் ஒவ்வொருவருக்குமே குடும் பப் பொறுப்புகள் சுமைகள் அதிகம். ஒவ்வோரிளைஞரின் தோள் களிலும், அக் குடும்பத்தைத் தாங்கியாக வேண்டிய பெரும் பொறுப்புகள் சுமத்தப்படுகின்றன. அக் குடும்ப வளையத்தை விட்டு, வெளியேறிக் குமுகாயத்தையும், நாட்டையும், உலகையும் பார்க்கின்ற பரந்து விரிகின்ற பார்வை, அவ்விளைஞர்க்குக் கட்டுப் படுத்தப் பெறுகின்றது; அல்லது மறைக்கப் பெறுகிறது; அல்லது, அறவே அகற்றப் பெறுகிறது. அக் குடும்ப வளையத்தைத் தாண்டிக் குமுகாயத்தைப் பார்ப்பதே அறமாகாது என்று தடுக் கப் பெறுகின்றது. 'ஊர் உலகம் எப்படிப் போனால் உனக்கென்ன? உன் குடுப்பத்தைப் பார்; உன் மனைவி மக்களைப் பார்; உன் தாய் பசித்திருக்க ஊர்த் தாய்களைப் பற்றி நீயேன் கவலை கொள்கிறாய்? உனக்கேன் இந்த வீண் வேலை? ஊர், உலகத்தை நீதான் தாங்கு கிறாயா ? உன் வேலையைப் பார்த்துக் கொண்டு நீ போ' என்று கூறிக் குடும்ப வளையத்தை விட்டு வெளியே வரத் துடிக்கும் ஓர் இளைஞரின் உணர்வை, முளையிலேயே கிள்ளி எறிந்து விடுகின் றனர், அவரின் குடும்பத்தார். இந்த நிலையில் அவர் பொதுத் தொண்டுக்கு எப்படிவர முடியும்? பொதுநிலையில் எப்படிச்சிந்திக்க முடியும் ? பொதுவுணர்வுதான் எவ்வாறு தோன்றும் ? இந்தக் குடும்பக் கட்டுகளை உடைத்துக் கொண்டு வெளியே வரத் துடிக் கும் ஆயிரத்தில் ஓரிரண்டு இளைஞர்களும், குடும்ப உறுப்பினர் களாலும் மனைவி மக்களாலும் சிதைக்கப்பட்டு விடுகின்றனர்; சீரழிக்கப்பட்டு விடுகின்றனர்.

இனி, இளைஞர்களுக்கு வரும் மனைவிமார்களைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. உலக வரலாற்றிலேயே, பொது நிலையில் ஈடுபட்ட அறிஞர்களுக்கும் தலைவர்களுக்கும் தொண்டர்களுக்கும் அவரவர் மனைவிமார்களே பெருத்த தொல்லைக் கூறுகளாக இருந்திருக்கின்றனர். பெரும் பெரும் வரலாற்றுப் புகழ் பெற்ற வீரர்கள், மெய்ப் பொருளாசிரியர்கள் கூட இந்த நிலைக்கு ஆளாகியிருப்பதை அவர்களின் வரலாறுகளைக் கூர்ந்து பார்ப்பவர்கள் நன்கு உணர முடியும். நம் வரலாற்று நிலைகளிலும் இக் கதைகள் உண்டு. இந்நிலைக்கு மாறான நிலைகளோ இத்தகைய சிலருக்கு அவர்களின் துணைவியர்களே பெரும் உதவியாளர்களாகயிருந்திருக்கின்ற செய்திகளோ இல்லாமல் இல்லை. எதிலும் விலக்கான பொது உண்மைகளைப் போலவே இதிலும் உண்டு. இருப்பினும் பொதுத் தொண்டு நிலைகளில் முற் கூறப்பெற்ற வரலாறுகளே மிகுதி.

பொதுத் தொண்டர்களுக்கும், பொது நிலையில் பெரிதும் ஈடுபாடு கொண்ட அறிஞர்களுக்கும் இத்தகைய சூழல்கள் அமைவதற்குப் பெண்களுக்கிருக்கும் இயல்பான குடும்பப் பற்றும், பொதுநல ஈடுபாட்டுக் குறைவுமே அடிப்படைக் காரணங்களாக ருக்கின்றன. இவையன்றி இன்னோர் இயற்கையான உயிர் ங்கியல் காரணமும் உண்டு. பொதுநிலையில் முழு ஈடுபாடு ண் இயங்கும் பேரறிஞர்களுக்கும், தொண்டர்களுக்கும், கொ [illegible]யாளர்களுக்கும் குடும்ப ஈடுபாட்டைக் குறைப்பதற்கே இத்தகைய சூழல்களை இயற்கை உருவாக்குகிறது என்பதை நாம் உய்த்து உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். மனைவிமார்களின் ஒன்றாத உணர்வுகளே, இத்தகையோரைப் பொதுவுணர்வுக்குப் பெரிதும் உந்தித் தள்ளுகின்றன. மனைவி கணவனுக்குப் பெரிதும் ஒத்த உணர்வுடன் இயங்கும் நிலையில், அவளின் அன்பிணைப்பும் அழகுக் கவர்ச்சியும் இவர்களின் வினைத்திறனைக் குறைத்தும் குடும்ப விழைவை மிகுத்தும் விடலாமன்றோ? திருக்குறளில் உள்ள 'பெண்வழிச் சேறல்' என்னும் நட்பியல் அதிகாரமும், அதில் உள்ள,

> மனைவிழைவார் மாண்பயன் எய்தார்; வினைவிழைவார்
> வேண்டாப் பொருளும் அது. (901)

> மனையாளை அஞ்சும் மறுமையி லாளன்
> வினையாண்மை வீறெய்தல் இன்று. (904)

> அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்
> பெண்ணேவல் செய்வார்கண் இல். (909)

என்னும் திருவாய்மொழிகளும், குடும்பத்தில் பெண் பால் தொடர்பு எந்த அளவில் அற வினைகளுக்கும் புறவினைகளுக்கும் தடையாக இருக்கும் என்பதை நன்கு உணர்த்துகின்றன.

-(தொடரும்.)

நூல்: அறிவியல் தமிழ்.

நூலாசிரியர்: முனைவர் வா. செ. குழந்தைசாமி அவர்கள், துணைவேந்தர், அண்ணா பல்கலைக்கழகம் சென்னை.

பக்கங்கள்: +19

விலை : உருபா 12-50

வெளியிட்டோர்: பாரதி பதிப்பகம், தியாகராயர் நகர், சென்னை 600017.

கழகக் காலத்துக்குப் பிறகு இந்த நூற்றாண்டே தமிழுக்குப் பொற்காலம் என ஆய்ந்து கூறினார் தமிழறிஞர் மு.வரதராசனார். சட்டம், மருத்துவம், பொறியியல் போன்ற எல்லாத்துறைகளிலும் தமிழ் ஏற்றம் பெற்றுள்ளது.

எனினும், அறிவியல் துறைகளைப் பயிற்றுவிக்க ஆங்கிலமே உகந்தது எனத் தம் தாய்மொழி வளமறியாத சிலர் இன்னமும் நினைக்கின்றனர். தமிழால் என்ன ஆகும் என்றெண்ணுவோரும் உண்டு. இன்னுஞ் சிலரோ, உண்மையுணராது, வடமொழியே வளமிகுந்தது என்று வாய்ப்புள்ள போதெல்லாம் தமிழுக்குத் தடைக்கல்- முட்டுக்கட்டை இட முனைகின்றனர்.

இத்தகு சூழலிலே, 'படிப்பு வேண்டும்; அது பயன்உள்ளதாகவும் இருக்கவேண்டும்' என்னும் புதுமை நற்கருத்தினைக் கொண்ட முனைவர் வா. செ. குழந்தைசாமி அவர்கள், அறிவியல் தமிழ் என்னும் பல நற்கருத்துக் களஞ்சியத்தை எழுதியுள்ளார்.

அறிவியல் தமிழ் எனும் பெயரிய இந்நூல் 1. கருவிவளர்ச்சி 2. ஆய்வு வளர்ச்சி, 3. கல்வி வளர்ச்சி, 4. வினை வலி, 5. அணுகுமுறை 6. அறிவியல் தமிழ் ஆக்கம்: இற்றைநிலை 7. அறிவியல் தமிழ் ஆக்கம்: வழிமுறைகள், 8. எழுத்துச்சீரமைப்பு, 9. துணைவரிவடிவம் 10. உடனடி (அவசர)த் தேவை எனப் பத்து அதிகாரங்களாகப் பிரிக்கப் பெற்றுள்ளது. பற்பல விழுமிய கருத்துகள், நெறிமுறைகள், அறிவுரைகள் நூல் நெடுகிலும் கட்சி, மத, கொள்கை வேறுபாடின்றி எல்லோராலும் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் காணப்பெறுவது இந் நூலின் தனிச் சிறப்பு.

இந்நூலில் காணப்பெறும் சில கருத்துகளைக் கீழே காண்க:-

வேளாண்மை ஊழி (யுகம்) போல, தொழில் ஊழி போல, கல்வி ஊழி இன்னும் தெளிவாக உணரப்படவில்லையெனினும்

ஒரு புது ஊழி தோற்றம் பெற்றிருக்கிறது என்பதை அறிஞர்கள் உணர்ந்திருக்கின்றனர்; ஒப்புகின்றனர். அதைத் தொழில்நுட்ப ஊழி (Age of High Technology) என்றும், தொழில்நுட்ப மின்னணு வியல் ஊழி (Technotronics Age) என்றும் அவரவர் தம் பார்வைக்கேற்பப் பல பெயரிட்டழைக்கின்றனர்,

- 'கருவி வளர்ச்சி' (பக்கம் 2)

தசைவலி (Muscular Energy) ஒன்றே வினைசெய்யும் ஆற்றலாகப் பயன்பட்டது. ஆங்காங்கு வெப்ப ஆற்றல் (Heat energy) காற்றின் வலிமை (wind energy) அருவி நீரின் வலிமை (Energy from water Falls) பயன்படுத்தப்பட் டிருக்கக்கூடுமாயினும், தசை வலியின் அடிப்படையிலேயே, இந்த நாகரிகம் அமைந்திருந்தது. வானளாவ நிற்கும் எகிப்தியப் பிரமிட் கட்டடமும் கண்கவர் கலைப் படைப்பான தஞ்சைப் பெரியகோயிலும் மாவினத்தின் - மாந்தத்தின் உடல்வலியால், கைத்திறனால் உருவாக்கப்பட்டவையே ஆகும்-

இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் ஏற்பட்ட பல முன்னேற்றங்கட்குக் கணிப்பொறியின் துணையே காரணம். கணிப்பொறி இன்றி விண்வெளிப் பயணம் இயலுவதன்று.

திண்மப்பொருளால் ஆனது மட்டும்தான் கருவி என்பதில்லை. ஒரு கருத்தும் (concept) கருவியாகலாம். ஒரு செய்முறையும் (Method) கருவியாகலாம். ஒரு கொள்கை (சித்தாந்தம்) கருவியாகப் பயன்படலாம். மாந்த வளர்ச்சி என்பது கொள்கையும் (சித்தாந்தமும்) செயலும் சேர்ந்தது. அறிவுலகில், நமது ஈடுபாடுகள் அனைத்திலும் நமது நோக்கம் உண்மை அல்லது மெய்ம்மையைக் காண்பதாகும். உண்மை தேடும் பணியை நாம் ஆய்வு என்கிறோம். -ஆய்வு வளர்ச்சி' (பக் 11, 12)

''அறிவியல் முறை, தருக்க முறையினின்றும் முழுதும் வேறுபட்டதன்று. அதற்கு மாறானதுமன்று. அதனின்றும் வளர்ந்த ஒன்று. அதனை உள்ளடக்கிய ஒன்று. தருக்க முறையைப் பயன்படுத்தி ஒரு கொள்கையை நிறுவுகிறோம். அதனைச் செயலாய்வு (சோதனை) மூலம் சரிபார்க்கிறோம். அதே போல, செயலாய்வு மூலம் கிடைத்த புலனங் (தகவல்)களை அலசி, ஆய்ந்து, தருக்க முறையைப் பயன்படுத்திச் சில கொள்கைகளை நிலைநாட்டுகிறோம். எனவே, அறிவியல் முறை தருக்க முறைக்கு இன்னொரு பரிமாணத்தைக் கூட்டிய ஒன்று. (பக் 16,17)

''பண்டை நாள்களில் செல்வம் படைத்த நாடுதான் கல்வி பெற முடியும் என்ற நிலை இருந்தது. அது முற்றிலும் மாறி, இன்று கல்வி பெற்ற நாடுதான் செல்வம் பெற்ற நாடாக இருக்க முடியும் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

- கல்வி வளர்ச்சி பக்கம்-25

கல்வி அறிவைப் பொறுத்தவரை மூன்று கூறுபாடுகள் நாம் கவனத்தில் கொள்ள வேண்டுவன;

1. கல்வி அறிவு சிறப்பான (அசாதாரண) வேகத்தில் வளர்ச்சியடைகிறது. அது இயல், தொழில் நுட்பத்துறைகளில் இன்றைய வேகத்தில், கல்வியறிவின் இரட்டிப்புக்காலம் (Doubling Time) 10 ஆண்டுகள் தாம்.
2. ஓர் இனம், உலகின் எந்தப் பகுதியிலும் நடைபெறும் கல்வியறிவு வளர்ச்சியை உடனுக்குடன் காணவும், அதைத் தனது மொழியில் இடம் பெறச்செய்து, அதைத் தனக்குச் சொந்தமாக்கிக் கொள்ளவும் முயலவேண்டும்.
3. கல்வி இன்று ஒரு பொருளியல் தேவை... முறையான கல்வி இன்று தெளிவும் தரும், திருவும் தரும். கல்வியின் அளவும் வளர்ந்திருக்கிறது; அதன் ஆற்றலும் வளர்ந்திருக்கிறது.

நமது மொழி நம்மினும் வறியதாக இருக்கிறது. நமது மண்ணினும் வறியதாக இருக்கிறது. நமக்குத் தெரிந்த அறிவியல் நமக்குத் தெரிந்த-நமது நாடு கண்ட தொழில் நுட்பம் நமது மொழியில் இல்லை. எனவே, அறிவியல், தொழில்நுட்பம் என்று வரும்பொழுது, நமது மொழி, வளர்ந்த (முன்னேறிய) நாட்டு மொழியிலிருந்துதான் விலகிநிற்கிறது என்பது இல்லை நமது மண்ணிலிருந்தும் விலகி நிற்கிறது.

அறிவியல் தொழில்நுட்ப அறிவு, நமது மொழிகளில் இடம் பெறாமையினால், அறிவியல் மனப்பான்மை, அறிவியல் அணுகு முறை, பரவலாக நம் மக்களிடையே உருவாகவில்லை.

'வினைவலி' பக்- 37.

''...-அறிவியல் நூல்களைத் தமிழில் எழுதுவது என்பது தமிழில் அறிவியல் இலக்கியம் படைப்பதாகும். அதற்கான இலக்கணம் உருவாக வேண்டும். வழிமரபு (பாரம்பரியம்) வளர வேண்டும்.

அறிவியல் தமிழ் இலக்கியம் விதையிட்டு முளைத்து, நாற்றுகிச் செடியாகிக் கொம்பாகி மரமாகும் காலத்தை மேலை நாட்டினர் செலவழித்த அளவிற்கு நாம் மீண்டும் செலவழிக்க வேண்டும் என்பதில்லை. வளர்ந்த கன்றை நட்டு மரமாக்குவது போன்ற வழியை நாம் கடைப் பிடிக்கலாம்.

இந்நூலில், அணுகுமுறை, அறிவியல் தமிழ் ஆக்கம், வழிமுறைகள் இற்றைநிலை போன்ற அதிகாரங்கள் மிக நன்கு சிந்தித்து நுணுக்கமாகவும் ஆணித்தரமாகவும் எழுதப் பெற்றுள்ளன. காட்டாக,

''தமிழ் விண்ணிலிருந்து வந்தது அன்று; விண்ணவர் தந்தது அன்று; மாந்தக் குமுகாயம் படைத்த மொழி.''

(அணுகுமுறை - பக் 46,

''கன்னித் தன்மைதான் தூய்மையுடையது என்பதில்லை. தாய்மையானதும் தூய்மையானதே. தனிமை வேறு; தனித்தன்மை வேறு'' (பக் 47)

'...தமிழன் யாதும் ஊரே' என்று பரவினான்.'யாவரும் கேளிர்' என்று நம்பினான். பரவிய மண்ணில் முழுமனத்தோடு பாடுபட்டான். வளம் சேர்த்தான். ஆனால், யாவரும் கேளிர் என்று அவனது கொள்கை இன்னும் நடைமுறையில் உலக அரங்கில் இடம் பெறவில்லை. எல்லா இடங்களிலும் பல சிக்கல் (பிரச்சினை) களைத் தமிழினம் சந்தித்து வருகிறது.'' (பக். 50-51)

தமிழில் பல்துறைச் சொற்கள்

''துறைச் சொற்களைக் கீழ்க்காணு வழிகளில் உருவாக்கலாம்:

1. பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படும் சொற்களை இன்றைய தேவைக்கேற்பப் பொருள்கொண்டு பயன்படுத்துதல்,
   (சான்று: Pilot வலவன். Aeroplane வானஊர்தி)
2. தற்கால இலக்கியங்களிலிருந்து தகுந்த சொற்களைப் பயன்படுத்துதல்,
3. பேச்சு மொழியிலிருந்து தகுந்த சொற்களை எடுத்தாளல்:
   (சான்று: Temple Trustee - கோயில் முறைகாரர்.)
4. தொடர்புள்ள பிறமொழிச் சொற்களைக் கடன்பெறல்.
   (சான்று: Decimal system தசம முறை)
5. பிறமொழித் துறைச் சொற்களை மொழிபெயர்த்தல்.
   (சான்று: photograph - ஒளிப்படம்
   Photosynthesis - ஒளிச்சேர்க்கை)
6. புதுச் சொற்களைப் படைத்தல்:
   (சான்று: molecule மூலக்கூறு. Gas வளியம்,வளிமம்)
6. உலக வழக்கை அப்படியே ஏற்றுக்கொள்ளல்:
   (சான்று:Ray - எக்சு கதிர், Sine A சைன் A Sine)

அறிவியல் தமிழ் ஆக்கத்தில், நாம் உருவாக்கவேண்டிய துறைச் சொற்கள், குறியீடுகள், சூத்திரங்கள் ஆகியவற்றை நான்கு வகையினவாகப் பாகுபடுத்திக்கொள்ளலாம்:

1. மாற்றமில்லாது அப்படியே ஒலிபெயர்த்துப் பயன்படுத்தப்படவேண்டிய சொற்கள்:
   சான்று: மீட்டர் (Metre), ஓம் (Ohm), ராடார்(Radar)

2. மாற்றம் எதுவுமில்லாது உலகஅளவில் பொதுமையானவை யாகப் பயன்படுத்த வேண்டிய குறியீடுகள், சூத்திரங்கள்:
(சான்று: குறியீடுகள் V¯, S, π, Σ சூத்திரம் H_2O

3. மாற்றமில்லாது ஒலிபெயர்ப்பதா, அல்லது புதிய சொல்லை உருவாக்குவதா என்ற கருத்து வேறுபாடுகட்கு இடந் தரும் சொற்கள்.
(சான்று: Concrete, Cement, Pump, (பக் 68, 69, 70)

4. புதிய சொற்கள் உருவாக்கப்பட்டேயாக வேண்டிய சொற்கள்.
சான்று: Stress Strain, Elasticity (பக் 68, 69, 70)

"Air, Wind (Air in motion is wind) ஆகிய இரண்டையும் ஒன்ருக்கி மயங்குவது நம் குறையேயன்றி நமது மொழியின் குறையன்று.

நெடிய நல்லாய்வுக்குப் பின் எழுதப் பெற்றுள்ள இந் நூலுக்குப் பொன் குடத்துக்குப் பொட்டிட்டதே போல் தனிச்சிறப்பு நல்குபவையாக அமைந்தவை எழுத்துச் சீரமைப்பு, துணைவரி வடிவம் என்ற கடைசி இரண்டு அதிகாரங்கள்.

தமிழில் 12 உயிர் எழுத்துகள் 18 மெய், (12×18=)216 உயிர்மெய். ஓர் ஆய்த எழுத்து ஆக 247 எழுத்துகள் என்று சொன்னவுடனேயே தமிழைக் கற்க வரும் பிள்ளைகள் (ஆங்கில மொழியிலுள்ள 26 எழுத்துகளோடு ஒப்பிட்டுத்) திகைக்கிருர்கள். 'கை' எனவும், 'லை' எனவும் ஒரே வரிசையில் வரும் எழுத்துகள் (கு, சு, டு, து என்றும்) வெவ்வேறு வகையாக எழுதப்பெறுகின்றன. இது தட்டச்சுப் பொறியையும், சொற் சமனுக்குக் கருவியையும் (Word Processor) வெகுவாகப் பயன்படுத்துங் காலம். ஆகவே, தமிழ் எழுத்துகளை முறைப்படுத்திச் சீரமைப்புச் செய்து, எல்லா மெய், உயிர்மெய் எழுத்துகளையும் முறைப்படுத்தலாமென்கிருர் நூலாசிரியர். ஏற்கத்தக்கதே. ஆனல், புதுமாற்ற எழுத்துகள் சிறு பிள்ளைகளுக்கு ஒரே மாதிரியாகத் தோற்றம் தருவனவாக இருக்கலாம். ஆகவே, அவற்றைச் சிறு சிறு வேறுபாட்டோடு அமைக்கலாம். (விளக்கம் நூலுள் காண்க.)

மலாய், இந்தோனேசிய மொழி போன்றவை உரோமன் எழுத்து வடிவத்தினை ஏற்றுப் பயனுற்றது போலவே தமிழும் கல்லூரி அளவிலும் வேறு வெளிநாடுகளிலும் உரோமானிய (ஆங்கில எழுத்துகளைப் பயன்படுத்தும்) எழுத்துமுறையை ஏற்றிடல் நன்று. இதனல் திராவிடமொழிக் குடும்ப மொழிகளிலுள்ள இலக்கியங்களும் வளரும் என்று விளக்குகிருர் நூலாசிரியர். ழ, ல, ள, ண, ந, ன, ர, ற போன்ற எழுத்துப் பலுக்கல் உரோமானிய எழுத்து வடிவில் பயன்படுத்தப் பெறுதல் எங்ஙனம் இயலும் என நாம் திகைக்கையில், மேற்கண்ட எழுத்துகளுக்குத் தக்க பலுக்கல் முறை கண்டபிறகே, உரோ

மானிய எழுத்து முறை அறிமுகப்படுத்தப் பெறல் வேண்டும் என அவரே விளக்குகிறார்.

ஒரு நூலில் காணப்பெறும் குற்றங்குறைகளைக் குறிப்பிடா விடின் நூல்நிறை முற்றுப் பெற்றதாகாது. 9-ஆம் பக்கத்தில், இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு வள்ளுவர், ''அறிவுடையார் எல்லாம் உடையர்,, என்று கூறினர். அன்று அது முழு உண்மையன்று. இன்று அஃது உண்மையாகி இருக்கிறது, என்று எழுதப் பெற்றுள்ளது. அக்கூற்று (அறிவுடையார் எல்லாம் உடையர்), அன்றும் உண்மை; இன்றும் உண்மையே. அன்றைக்காட்டிலும் இன்று அவ்வுண்மை துலக்கமாய் உள்ளங்கை நெல்லிக்கனியாய்த் தெரிகின்றதெனலாம்,

பக்கம் 137-இல் ''இப்பொழுது நாம் பயன்படுத்தும் இலக்கங்கட்கு உலக இலக்கங்கள் அல்லது அரேபிய இலக்கங்கள் என்ற பெயர் வழங்கப்படுகிறது. உண்மையில், இவை இந்தியாவில் உருவாகி....,'' என்றுள்ளது. இவ்வெண்கள் உருவானது தமிழகத்திலேயே என்பதையும், தமிழர் எண்களின் குறியீடுகளாகப் பயன்படுத்தி வந்த - பயன்படுத்தும் 'எழுத்துருவின்' முறைப்படுத்தப்பெற்ற - சீராக்கப்பெற்ற வடிவங்களே என்பதையும் நூலாசிரியர் குறிப்பிடவில்லை.

தமிழ் எண்கள்:	க	உ	ங	ச	ரு	சு	எ	அ	கூ
உலக இலக்கங்கள்:	1	2	3	4	5	6	7	8	9

(தமிழ் எண்களுக்குள் உலக எண்கள் அடங்குவதை ஒப்பிட்டுப் பார்க்க)

நூலின் கண், ஆங்காங்கு சிற்சில அச்சுப் பிழைகள் தென்படுகின்றன. ஈற்றில் சொல்லடைவு அகராதி இருந்திருப்பின் இந்நூல் பெரும் பயன் விளைவிப்பதாயிருக்கும்.

நூலின் மேலட்டை கருநீல வண்ணத்தில் வெள்ளைப் படங்கள் தோன்றுவதால் சற்றுப் பொலிவற்றுள்ளதெனலாம்.

மொத்தத்தில், இந்நூல் தமிழர்களை அறிவியல் வழியில் உந்தி விழிப்புறச் செய்து மேனிலைப்படுத்த எழுந்த நூலெனின் மிகையாகாது. அறிவியல் துறைகளில் தமிழர் பின்தங்கிப் போகாதிருக்க இந்நூலைப் படித்துப் பயனுறுவார்களாக. நூலாசிரியருக்கு நம் வாழ்த்தும் பாராட்டும் உரியன.

-தமிழ்மணி. அரங்கமுருகையன், இலண்டன்.

(இதழாசிரியர் குறிப்பு : இந்நூலுக்கான தென்மொழியின் திறனாய்வுக் கட்டுரை ஒன்று வெளிவருவது நேரமின்மையால் காலந் தள்ளிப் போகிறது. இவ் விடைக்கால மதிப்பீடாக அறிஞர் திரு. அரங்க முருகையனாரின் மதிப்புரையை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம்.)

ஆரியப்படுத்தப்பட்ட கலைகளில்-
வில்லிசை !

—அதியமான்.

'தமிழர்களின் கலைகள் ஆரியப்படுத்தப்படுகின்றன' !
-பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

தமிழர்களுடைய கலைகள் ஆரியப்படுத்தப் பெற்றன. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இப்பணி இன்றுவரை தொடர்கிறது. நாளையும் ஆரியப்படுத்தப்படுவது நிற்காமல் தொடரும். எப்படி என்றால்? இந்நாட்டில் வாழும் ஆரியப் பார்ப்பனர் ஒவ்வொரு நிமையமும் மிக்க உன்னிப்பாக இருந்து கலைகளை அவர்களுடைய பண்பாட்டிற்கு இழுத்துக் கொள்ளுகிறார்கள். தமிழர்கள் இதைக் கண்டும், கேட்டும், ஏமாறியவர்களாக இருந்து, இன்னும் திருந்தாமல் ஏமாற்றிக் கொண்டே யிருக்கிறார்கள். ஏன் இப்படித் தமிழர்கள் ஏமாறுகிறார்கள்? தந்நலமே கரணியம். தமக்குப் பட்டங்களும்,பதவிகளும் பணமும் கிட்டி வாழ்க்கை சிறிது வளமானால் போதும்; கலைகள் எந்நிலை அடைந்து, எக்கேடு கெட்டாலும் நமக்கென்ன கவலை, என்றிருக்கிறார்கள். உணர்வும் இல்லை; தமிழர்களுக்கு மானமும் இல்லை. தன்னினத்தையே காட்டிக் கொடுத்துத் தான் வாழும் நிலைகளைத்தாம் பார்க்க முடிகிறது.

கலைகள்-மாந்தர்களின் உள்ள உணர்வுகளில் எழுந்து இன்ப நுகர்ச்சிக்காக ஆக்கப்பட்டவை அல்லது ஆனவை. அது மட்டும் அன்று. கலை மக்களை வழி நடத்தவும் பயன்படும். அது பொது மக்களுக்குக் கற்பிக்கும் ஒரு கருவியுங்கூட. காட்டாகக் கூற வேண்டுமானால், மிகச் சிறந்த நற்குணங்களையுடையவன் நாடகத்தில் அல்லது படக்காட்சிகளில், நடிப்பில் தீயவனாக நடித்தால் அவனை மக்கள் தீயவன் என்றே கருதுகிறார்கள். தீய்குணம் உடையவன் நல்லவனாக நடித்தால் அவனை மக்கள் நல்லவன் என்றே கருதுவதையும் நாம் காண்கிறோம். இவ்வகை நடிப்புகளே தமிழகத்தையும் ஆந்திராவையும் ஆளுகின்றன என்பதையும் அறிவோம். எனவே கலைகள் மாந்தர்களை வழிப்படுத்தும் ஒரு கைகாட்டி எனக் கூறுவதில் உண்மையுண்டு.

கலைகள் ஓரினக் குமுகாயத்தின் பண்புகள், பழக்க வழக்கங்கள், நாகரிகக் கூறுகள் ஒழுக்கங்கள் போன்றவற்றை எடுத்துக் காட்டும். குமுகாயத்தில் நடக்கும் - கேடுகளையும் சுட்டிக்காட்டி அதனால் விளையும் பயன்களையும் காட்டும். எனவே கலைகளே நம்மை ஆளுகின்றன. ஆகவே இக் கலைகளைக் கண்ணும் கருத்துமாகப்பேணி, அவற்றை ஆக்கும் ஆசிரியர்கள் மிகக் கவனமாகக் காத்தல் வேண்டும். அவர்களுக்கு இனப்பற்றும் தாய்மொழிப் பற்றும் கட்டாயம் இருத்தல் வேண்டும். அவர்களுக்குத் தந்நலம் இருத்தல் கூடவே கூடாது. தன்னின வாழ்வே முகாமையானது எனக்

கருதியே அக் கலைஞனின் வாழ்வு அமைதல் இன்றியமையாமை யாகும். இனி, இக் கட்டுரையின் நோக்கத்திற்கு வருகிறேன்.

'தமிழர்களுடைய கலைகள் ஆரியப்படுத்தப்படுகின்றன' என**ப்பாவலரேறு பெருஞ்சித்திரனர்** அவர்கள் சொல்லுவது சரிதானு ? சான்ருக நாட்டுப்புறக்கலைகளில் ஒன்ருன வில்லுப்பாட்டை எடுத்து ஆய்ந்தால் அவர்கள் கூறி எச்சரிப்பதின் உண்மை விளங்கும். இவ் வில்லுப்பாட்டு எப்படி முதன் முதலில் உருவானது என முதலில் தெரிந்து கொள்வது இன்றியமையாதது. வில்லுப்பாட்டிற்கு முதன்மைக் கருவியாகப் பயன்படுத்தப்படுவது வில். வில் அக்காலப் போர்க் கருவிகளில் ஒன்ருகவும், கொலைக் கருவியாகவும் பயன்படுத்தப் பெற்றது.

அதன் பெயராலேயே 'வில்லுப்பாட்டு' என அழைக்கப்படுகிறது. மேலும் தாளக் கருவியாக இருப்பது குடம். வில்லும் குடமும் ஆக இவ்விரண்டுமே வில்லிப்பாட்டிற்கு முகாமையானவை. போர் மறவர்கள் பொருது வெற்றிகண்டதும் மகிழ்ச்சியால் உள்ளம் பொங்க மதுவைக் குடங்களில் கொணர்ந்து குடித்து விட்டு வெற்றுக் குடத்தின்மீது வெற்றிக்குக் கரணியமாக இருந்த வில்லையும் வைத்துக் கொண்டு அம்பால் வில் நாணைத் தட்டி இசை எழுப்பிக் குடத்தில் தாளம் அடித்துப் பாடி இருப்பார்கள். அப்போது அரசனுடைய மறச்செயலையும், மாற்றரசனை வெற்றி கொண்ட திறத்தையும் விளக்கிப் பாட்டுப்பாடி வில் தாளத்தோடு ஆடி மகிழ்ந்திருப் பார்கள். அது காலப் போக்கில் வளர்ந்து, இன்றைய நிலைக்கு வளர்ந்திருக்க வேண்டும். அப்போது தமிழ் அரசர்களின் வரலாறு, புகழ், பண்பு முதலான வற்றையும் போர் மறவர்களின் திறத்தையெல்லாம் பாடிக் காட்டிய வில்லுப் பாட்டுக் கலைஞர்கள் இப்போது ஆரிய மதநூல்களின் சாரங்களை விளக்கும் இராமாயணம், பாரதம் போன்றவற்றையும், சிறு தெய்வங்கள் எனக் கூறிக்கொள்ளும் பழங் காலப் போர் மறவர்களையும் ஆரியர்களுடைய பழக்க வழக்கங்களுக்கு ஏற்றாற்போல அமைத்துப்பாடி, அக் கலையை (வில்லுப்பாட்டை) ஆரியக் கலையாக மாற்றி விட்டார்கள்.

தி. சி. கோமதி நாயகம். க. மு. அவர்களால் எழுதப்பட்டுச் சென்னை, தமிழ்ப் பதிப்பகம் வெளியிட்ட 'தமிழ் வில்லுப் பாட்டுகள்'' என்னும் நூலில் பக்கம் 73-74 இல் கூறப்பட்டுள்ள கருத்துகளை இங்கு நோக்கலாம்:

'வில்லேர் உழவர் ஆகிய வீரர்களின் கதைசொல்லும் ஆர்வம், ஆற்றல் ஆகியவற்றின், அடிப்படையிலேயே வில்லுப் பாட்டுக் கலை தோன்றி இருத்தல் கூடும். எனவே பொதுவாகக் குறிப்பிடுதலைக் காணலாம். வேட்டம் மேற்சென்று மீண்டவீரர், ஆநிரை கவரவும் மீட்கவும் செய்த போரில், வீரம் காட்டி மடிந்தவர் பற்றிய செய்திகளைப் பிறர் கேட்டு மகிழுமாறு தம் திறமைக்கு ஏற்ப எடுத்துரைக்கும் நிலை ஏற்படுதல் இயல்பே யாகும். அவ்வாறு எடுத்துரைக்கும் போது கையிலுள்ள வில்லைத்

தட்டிக் கொண்டே உணர்ச்சிப் பெருக்கால் இசை கூட்டிப் பாடி யிருத்தலும் கூடும்.''

அடுத்துக்கூறப்பட்டக் கருத்தும் பொருந்து வதைக் காண்க:-

''களத்திலிருந்து மீண்ட பின் கள்ளுண்டு மகிழ்ந்த வீரர் களிப்பு மிகுதியில் வெறுமையான அக் குடங்களையே கையில் தட்டித் தாளமிட்டவாறு கதைபாடுவோருடன் சேர்ந்து கொண்டு பாடி மகிழ்ந்த பின்னர், அதுவே வில்லுக்குரிய தொரு துணைக் கருவியாகக் குடமும் அமைந்து விடக் காரணமாகி இருத்தல் வேண்டும்' என்றே எண்ணத் தோன்றுகிறது.

''அரிய செயல் செய்தவர்களுக்கும் புகழ் மிக்க அரசர் களுக்கும் மறச்செயல் புரிந்த மறவர்களுக்கும் நன்றிக் கடனுக அவர்களுக்குச் சிலைவடித்து நடுகல் நாட்டி விழா எடுத்து மகிழ்ந்த செய்திகள் நம் இலக்கியங்களில் கண்டு மகிழ்கிறோம். சிலம்பில் கண்ணகிக்கும், புறநானூற்றில் அதியமானுக்கும் சிலைஎடுத்த வரலாறுகளை நாம் படிக்கிறோம். அவ் விழாக்களில் அன்னாரின் வாழ்வியல் வரலாறுகளை வில்லுப் பாட்டில் பாடி யிருக்கவேண்டும். பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் மறச் செயல் செய்த வீரர்களே இன்றைய சிறுதெய்வங்களாக வணங் கப்படுபவர்கள்; என ஆய்வாளர் கருதுகிறார்கள்.'' அதே நூல் பக்கம் 30 இல் கூறப்படுவதைக் காண்க.''

வில்லுப் பாட்டிலே பாடப்பெற்ற ஒவ்வொரு வீர வரலாறும் புராணத்தன்மை ஊட்டப்பெற்றது; அதனதன் தெய்வத்தன்மையை மேலும் மேம்படுத்திக் கொண்ட நிலைமையும் ஏற்பட்டிருக்காலம். அவ்வணக்கங்கள் நடக்கும் இக்காலத்தில் அன்னார்களின் மறச்செயல்களை வில்லுப்பாட் டாகப் பாடுவதை நாம் காண்கிறோம், அல்லவா ! அவ்வீரர்கள் யாவரும் அச்ச மூட்டும் கொடியவர்களாக நாம் எண்ணும்படி ஆரியப் பார்ப்பனர்களே செய்திருக்க வேண்டும். தமிழ் மறவர் களை ஆரியர்கள் அரக்கர்களாகவும் கொடியவர்களாகவும்காட்டி யுள்ளனர். கிரேக்கம்- பாலத்தீன் போன்ற பழங்கால நாகரிகத் தோடு ஒத்து நோக்கத்தக்க தமிழர்களின் நாகரிகக் கலைகளை முல்லைநில நாகரிகத்தில் வாழ்ந்த ஆரியர்கள் எங்ஙனம் தம் பண் பிற்கு இழுத்திருக்கமுடியும் என ஓர் ஐ. ம் எழு வ இயற்கை . அக்காலத் தமிழக அரசர்கள் ஆரியர்களின் கூட்டுறவால் தங்க ளுடைய தூய தமிழப் பெயர்களையே அவ்வாரியர்கள் பேசிவந்த சமற்கிருத மொழிப் பெயர்களாக மாற்றிக் கொண் டார்கள், என்றால் அவர்களுடைய (ஆரியர்) வல்லாண்மையால் ஏன் ? தமிழர் கலைகளை ஆரியப்படுத்த முடியாது ?

'இவை தமிழல்ல' என்ற அகரமுதலியின் ஆசிரியர் சொல் லாய்வாளர் திரு, அருளி அவர்களின் முகமுன்னுரையில் பக்கம் 13-இல் காணும் குறிப்பைக் கண் நோக்க.

'அறிவுடைநம்பி, இளந்திரையன், இளம்பெருவழுதி, பூதப் பாண்டியன், கோப்பெருஞ் சோழன், சோழன் இளங்குட்டுவன், இரும்பொறை, கிள்ளிவளவன், நலங்கிள்ளி, நெடுஞ்செழியன், மாறன்வழுதி, பெருங்கடுங்கோ, மாவளத்தான், நெடுஞ்

சேரலாதன், இளங்குமணன், வாழியாதன், கரிகாலன், நல்லியக் கோடன் என்றவாறான செப்பமுற மிளிர்ந்த செந்தமிழ்ப் பெயர் களை மட்டுமே தாங்கிய மன்னர்களைக் கொண்டிருந்தது அன்றைய தமிழகம்! ஆனால், அதுவே கி. பி. மூன்றாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டு, அரிகேசரிமாறவர்மன் (கி. பி. 7 ஆம் நூற்றாண்டிற்கு இடையில், குமாராங்குசன் (கி.பி. 831) பாண் டியன் ஸ்ரீமாறன், ஸ்ரீவல்லபன், பரச்சக்கர கோலா காலன் (கி. பி. 9 ஆம் நூற்றாண்டுக்கு இடையில்), விஜயாலயன் (கி. பி. 881-907) ஜடில பராந்தாமன், பாங்காவர்மன் என்றவாறு பெயர் சூட் டிக்கொண்ட மன்னர்களைப் பெற்றிருந்தது என்றால், அ'து ஆரியப் பிராமணர்களின் வல்லூரமான சமயத் திருத்த திணிப்பின் படிப்படியான வெற்றி ஈட்டம் என்பதல்லாமல் வேறு என்ன சொல்வது?

இவ்வகையாகத் தமிழகத்தை ஆண்டு வந்த அரசர்களையே தன் பக்கம் இழுத்துக்கொண்ட பார்ப்பனீயம், சூது வழியில் தமிழ்க்கலை களில் ஒன்றான வில்லுப் பாட்டையும் தன் பக்கம் இழுத்துக் கொண்டது.

நெல்லை மாவட்டத்தில் வில்லுப் பாட்டுக் குழுவினர் "**முத்துப் பட்டன் கதை**" என்றொரு கதையைப் பாடி வருகின்றனர். இக்கதை

(தொடர்ச்சி 32 ஆம் பக்கம் பார்க்க)

என்றுதான் உருப்படப் போகுதிந் நாடு !

பாவலர் **தாழை. ந. இளவழகன்.**

என்றுதான் உருப்படப் போகுதிந் நாடு !
ஏழையர் உழைப்பிலே போடுது, பீடு !
இன்று விடுதலை பெற்றதும் என்றே
இரவும் பகலுமாய் இயம்புது நன்று ! (என்றுதான்)

வாட்டும் வறுமைகள் வலிவுடன் ஆற,
வகைபல அரசியல் கட்சிகள் சூழ,
நாட்டில் கொடுமைகள் நாளும் பெருக,
நந்தமிழ் மாந்தர்கள் நலிவால் உருக ! (என்றுதான்)

பொய்யும் களவும் புதுமைகள் புரிய,
பொழுதொரு திட்டமாய் புழுப்போல் விரிய,
வையம் புகழ்ந்திடச் சொற்களால் பேசி,
வஞ்சகம் சூதுமே வளர்ந்தன சீச்சீ ! (என்றுதான்)

பெண்கள் கற்பு போனது, சூறை !
பேயர்க்குப் பெண்ணே பச்சிளங் கீரை !
மண்ணில் பெண்மை விலைகூற லாச்சு !
மடமையே இன்று வளமுற லாச்சு ! (என்றுதான்)

எங்கும் திரைப்பட இழிநிலை மாட்சி !
இதுவே நாட்டினில் ஏற்புடைக் காட்சி !
சிங்களன் தமிழனைக் கொல்கிறான் அங்கே !
சிறுமையால் தமிழனே அழிகிறான் இங்கே ! (-என்றுதான்)

செந்தமிழ் நாடென்னும் போதினிலே...!

- வள்ளி கேள்வன்

1. செந்தமிழ் நாடென்னும் போதினிலே - பொங்கும்
இடிமுழக்கம் பாயுது காதினிலே - எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே - தமிழ்
மானம் பறக்குது காற்றினிலே !

2. சாதி அரசியல் மாட்சியிலே - இந்து
சமயம் விரட்டும் தளர்ச்சியிலே - இரு
காது கிழிந்திடும் பான்மையிலே - மேடைக்
கத்தல் மலிந்த தமிழ்நாடு !

3. மாணவருக்குத் திரைப் படங்கள் - மதி
வளர்ச்சிக்கு நடிகரின் மன்றகங்கள் - மனக்
கோணல் இலங்கும் எழுத்தாளர் - தமிழ்க்
கொலைபுரிந் தோங்கும் திருநாடு !

4. ஊட்டுவதில்லை தமிழுணர்ச்சி - நெஞ்சில்
ஊட்டுவதில்லைபண் பாடுகளை - கை
யூட்டுடன் ஊழல்தனை வளர்த்தே - அர(சு)
ஓச்சும் உயர்ந்த(!) தமிழ்நாடு !

5. தில்லிக்குக் காவடி தூக்கிடுவார் - இங்கே
செந்தமிழ் வீறு முழங்கிடுவார் - நித்தம்
கொள்ளை கொலையுடன் உணவுத் திட்டம் - தனைக்
கொண்டு செழிக்கும் தமிழ்நாடு?

6. மொந்தையில் கள்நறவைக் கொடுத்தே - வாழ்வு
முழுகிப்போய் விடுமென்று சொல்லிக்கொண்டே - அட
இந்தி எதிர்ப்புடன் தில்லிக்குப் பல் - காட்டி
இளித்துப் பிழைக்கும் தமிழ்நாடு !

7. காவிரி நீருக்குக்கை யேந்துகின்றார் ! - புயற்
காற்றழி வுக்கும்கை நீட்டுகின்றார் ! - எந்தத்
தேவைக்கும் திருவோ(டு) எடுப்பதுவே - கொள்கை
என்று சிறக்கும் தமிழ்நாடு !

8. அண்ணா பெரியாரைப் போற்றிக்கொண்டே - காஞ்சி
''ஆசார்யாள்'' பாதத்தைக் கழுவுவது - உயர்
கண்ணியம் என்றுவரையறுத்தே அமைச்சர்
கூட்டம் களிக்கும் தமிழ்நாடு !

9. சிங்களக் காடையர் போர்பழக - இரமேச்
சுரத்துத் தமிழரைப் பலிகொடுப்பார் - இன்னும்
'சங்கம்' அமைத்துத் தமிழ்வளர்ப்பார் - இலங்கைத்
தமிழினம் மாய்வதைப் பார்த்திருப்பார் !

10. இலங்கைத் தமிழச்சி கற்பிழந்தால் - என்ன,
இந்திய ஒற்றுமை பேணுவதே - என்றும்
நலந்தரும் மாண்பெனும் ஆட்சி நடைபெறும்
நன்மை நிறைந்த தமிழ்நாடு !

கொய்யாக்கனி

நாடக ஆக்கம் அதியமான்.

(பாவலரேறு **பெருஞ்சித்திரனார்** அவர்களின் பாவியம்.)

காட்சி கக.

உறுப்பினர்: கிழவர், வள்ளி, சிங்கன், கருப்பனன், கண்ணையன்.

இடம்: வீட்டுத் தோட்டத்தின் ஒரு மூலை.

காலம்: இரவு.

கிழவர்: (குறட்டை உறக்கம்)

வள்ளி: (மெதுவாக எழுந்து தாத்தா உறங்கிவிட்டாரா, எனப் பார்க்கிறாள். மீண்டும் படுத்துக் கொள்கிறாள்.)

கிழ: (குறட்டை உறக்கம்.)

சிங்: (தனிமொழி தோட்டத்தின் ஒரு மூலையில் நின்று கொண்டு) இந்தப் பெண்களே இப்படித்தான். வரச் சொன்னால் வரார்; வந்தால் போகார். எவ்வளவு நேரமாகக் காத்து நிற்கிறேன். ங் - நான் காணும் மலர்கள் யாவும் அவளாகவே தோன்றுகின்றன. அப்படி அவள் அழகை என் கண்ணுக்குள் பதித்து விட்டாள். உள்ளத்தில் எழும் எண்ணங்களும் அப்படியே! எண்ணுவதெல்லாம் அவளையே! என் உள்ளத்தைப் பெயர்த்து என்னை அவளையே எண்ணவைத்து விட்டாள். அவள் பேசிய பேச்சுகள். இத் தென்றலின் ஒலியில் ஒலிக்கிறது. (சற்று உன்னி) ஒருவேளை என்னை வரச்சொன்னதை மறந்திருப்பாளோ? (எட்டி எட்டிப் பார்க்கிறான். அவள் வருவதைப் பார்த்து) அப்பா! சிலை போல வந்து விட்டாள்.

வள்: அத்தான்! (ஓடி வருகிறாள்) மிகுந்த நேரமாக இந்த இடத்தில் இருந்து விட்டீர்களோ? அத்தான், என்னை மன்னித்து விடுங்கள்.

சிங்: மன்னிப்பதா? உன்னை மன்னிக்கவே மாட்டேன். தண்டனையைப் பொற்றுக் கொள். (அவள் கையைப்பிடித்து இழுத்து முத்துகிறான்.)

வள்: அத்தான்! தண்டனையென்றால், வலிக்கல்லவா வேண்டும்! இத் தண்டனை இனிக்கிறது!

சிங்: இனிக்கத்தானே செய்யும்! ஏன் வள்ளி இவ்வளவு வேளை?

வள்: தாத்தாவை உறங்க வைத்து விட்டு வரவேண்டாவா?

முறை. மக்கள் ஆட்சியில் ஏற்றுக்கொண்ட செயல்பாடு. இதனைத் தாம் ஆட்சியில் இருக்கும்போது எவ்வாறு அணுகினர்? இரும்புக் கைகொண்டு ஒடுக்குவோம் என்று கூறவில்லையா? ஒப்புரவுக் கொள்கையாளர் செய்யும் செயலா இது?

பதவி நலம் பெறுவதற்காகத் திராவிட நாட்டுக் கொள்கையைக் கை நெகிழவிட்ட பின் ஏற்றுக்கொண்ட 'மாநில சுயாட்சிக் கொள்கையை வென்றெடுக்க நடத்திய போராட்டங்கள் எத்தனை? சிறை சென்றவர்கள் எத்தனை ஆயிரம் பேர்? இதன் விளைவாகத் தமிழ்நாடு கூடுதலாகப் பெற்ற அதிகாரங்கள் எத்தனை? எள் மூக்கத்துணையளவாவது இந்தித் திணிப்பு ஒழிந்ததா?

இன்றைய அரசியல் கட்சிக்காரர்களின் மொழிப்பற்றும் இனப்பற்றும் மெய்யானதல்ல. அரசியல் ஊதியம் பெறவே அவ்வாறு பேசுகின்றார்கள். அதுபோலத்தான் பகுத்தறிவும்.

பெரியார் மாவட்டம் அமைத்து விட்டுச் சங்கராச்சாரியிடம் சென்று வாழ்த்துப்(ஆசி) பெறுவார்கள். மூகாம்பிகை கோயிலுக்குப் போய்விட்டு வந்து, பெரியார் நூற்றாண்டு விழாக் கொண்டாடுவார்கள்.

இத்தகைய சூழ்நிலையாளர்களை மக்கள் அடையாளங் கண்டு கொள்ளத் தடையாக இருந்து, திரை போட்டு மறைப்பது அறியாமைதான். அறியாமைக்குக் காரணம் பொருளியல் தாழ்நிலைதான்.

மீனவ நண்பனாக நடிப்பவர்களெல்லாம், மீனவர்களின் நண்பனாகிவிட முடியாது. நடிப்பு உண்மையாகாது. நடிப்பைக் கண்டு ஏமாறிய மக்கள் பொதுவுடைமைக் கருத்துள்ள பாடல்களுக்கு வாயசைத்தவர், பொதுவுடைமைக் கொள்கையாளர் என்று எண்ணி ஏமாறிய மக்கள் அதற்குரிய பயனைப் பெறுகின்றார்கள்.

மீனவ மக்களின் வாழ்க்கையைச் சீர்குலைத்துச் சென்னைக் கடற்கரையை அழகுபடுத்துவது எவருக்காக? பணக்காரர்களுக்காக!

ஏழை மக்களால் வளர்ந்த இயக்கம், இன்று அம்மக்களை விட்டு வெகு தொலைவில் சென்றுவிட்டது. அப் பாசறையில் நச்சுப் பாம்புகளும், நயவஞ்சக நரிகளும் புகுந்து நாயகம் செய்து கொண்டு இருக்கின்றன.

சென்ற 22 ஆண்டுகளாகத் தனித்தமிழில் இதழ்களை நடத்தி வரும், இனித் தமிழ் என்றால் தனித்தமிழே என்று நிலை நாட்டி வரும், எங்கள் அருமைப் பேரறிஞர் பெருஞ்சித்திரனார் மதுரையில் நடைபெற்ற 'உலகத் தமிழ் மாநாட்டில்' கலந்துகொள்ள அழைப்பு விடுத்துப் பின்னர் அழைப்பு மறுக்கப்பட்டது ஏன்? அவருக்கு என்ன குறை? தகுதி இல்லையா? அவருக்கே தகுதி இல்லையென்றால்...?

ஏ! தாழ்ந்த தமிழகமே! என்றைக்கு உண்மையான தமிழுணர்வாளர்களை அடையாளங் கண்டு, அவர் பின்னே நடையிடத் தொடங்குவாயோ அன்றே, நீ தலைநிமிரும் நிலை பெறுவாய்.

இவ்விரு இயக்கங்களால் மக்களின் நிலை இம்மியளவும் உயரப் போவதில்லை. தனி மாந்த வழிபாட்டுக்கு முகாமை அளிக்கின்றனர்.

ஆசிரியர் இயக்க ஒற்றுமையைச் சீர்குலைத்து, இயக்கத்தை உடைத்தவர்கள். இவர்களுக்குப் பின்னாலே கண்மூடித் தனமாக ஆதரிக்கும் ஒரு கூட்டம் உளது.

'இயக்கமே தாங்கள்; தாங்களே இயக்கம்' என்று மாயையை உருவாக்கியுள்ளனர்.

தாங்கள் இல்லாவிடில் இயக்கமே இல்லை என்ற நம்பிக்கையை ஊட்டியுள்ளார்.

இனி, இவர்களுக்காக வரிந்து கட்டிக்கொண்டு, வழக்காடுவோருக்குக் 'கருத்து மேடை'யாகத் 'தென்மொழி' அமைவதைத் தென்மொழி அன்பர்கள் விரும்பவில்லை. இதனைத் தென்மொழிக்குத் தெரிவிக்கின்ற தென்மொழி அன்பர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

எனவே, கருத்து மோதல் இத்துடன் நிற்கட்டும். தென்மொழியின் நற்பணிக்கு இடையூறு விளைவிக்க வேண்டா! தென்மொழி தமிழர்க்குக் கிடைத்த பெரும்பேறு! அதனைக் கைநெகிழ விட வேண்டா! நன்றி! அன்புள்ள,

—செந்தமிழ்வாணன், பாலகிருட்டிணபுரம், கீரனூர்.

குறைமாதக் குழந்தை!

தரங்கை-பன்னீர்ச் செல்வன்

(தனிச்சீர் சமநிலைச் சிந்து)

குறைமாதக் குழந்தையடா, புதுக்கல்வித் திட்டம் - அற்றைக்
குலக்கல்விப் புரட்டலிலும் இதுமிகவும் மட்டம்;
முறையாக ஒருசிலரை முன்னேற்றும் நோக்கு - தமிழர்
முதுகேறிப் பரியோச்சும் புதுக்கல்விப் போக்கு!

ஒருகாலும் பின்னுள்ளோர் உயர்ச்சியுற மாட்டார் - இந்தி
ஓரவஞ்சர் பிறரெவர்க்கும் ஓங்குவழி காட்டார்;
இருநாவர் - ஏழையரின் வறுமையிருள் ஓட்டார் - தமிழர்
இவ்வுண்மை உணராரேல் இழிமயிரும் ஈட்டார்! 2

அதிகாரப் புதுக்குலத்தை ஆக்குமிந்தக் கல்வி - எல்லாம்
அவனாலே என்போரை ஊக்குமிந்தக் கல்வி;

[தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க]

அவர், கனவிலே கூட வள்ளி-வள்ளி என்பார். அதோடு மட்டுமன்று; படுத்திருக்கிருளா என்று எழுந்து பார்ப்பார்.

சிங்: (வள்ளியை அணைத்து இதழ்களைச் சுவைக்கிருன்.)

கருப்: (இடையில் வருபவன், சட்டென்று சிங்கன் பக்கம் நெருங்கி) ஏண்டா? இவள் என்ன உனக்கு உறவா ?

கண்: (வந்து கருப்பனேடு நின்ருன்.)

சிங்: ஆம். நீங்கள் யார் ?

கண்: கள்ளப்பயல் ! எங்களையா யாரென்று கேட்கிருய் ? யாரென்று சொல்லுகிரேம். இந்தா... (சிங்கனின் தோள்களில் குத்துகிருன்.)

சிங்: (கண்ணையனின் கையைத் தட்டி) ஒழுக்கங் கெட்டவர்களே! நெருங்காதீர்கள். எலும்புகள் தூள் தூளாகும்.

கருப்: (சிரித்து) என்னுடைய உடலைப் (உடம்பை முறுக்கிக் காட்டி) பார்த்தால் யாருடைய எலும்பு தூளாகும் என்பது தெரியும். டேய்! இவளோடு குலாவ நீ யாரடா? மடயா !

சிங்: சீ! சீத்தையே ! வாயாடாதே; உன் வன் நெஞ்சு சிதையும்!

கரு: குருவிக் குஞ்சே ! உன்னைப் பிழிந்து விடுவேன்.

கண்: (வள்ளியைப் பார்த்து) தென்னஞ்சாறே! என்பக்கம் வா. உன்னை அடைவேன். அல்லது விடுவேன் உயிரை.

சிங்: (கருப்பனின் மூக்கில் குத்துகிருன்)

கருப்: (அரத்தம் வருகிறது துடைத்துக் கொண்டு) டேய், குருதி வரவா குத்துகிருய் ? பார், இந்தா, வாங்கிக் கொள். [சிங்கனைக் குத்துகிருன்]

சிங்: [குத்தைத் தடுத்துக் கருப்பனைத் தூக்கி எறிகிருன். அவன் தொப்பென்று தரையில் விழுந்து] ஏய், கண்ணையா, அடியடா அந்தப் பயலை

கண்: [சிங்கனை அடிக்கிருன்.]

வள்ளி: [அலறுகிருள்]

சிங்: கண்ணையனைக் குத்துகிருன்] இந்தா, ஏன் மீதி இருக்க வேண்டும் ? உனக்கும் தருகிறேன்.

கண்: கருப்பண அண்ணனே!; எழுந்துவா. இந்தத் தடிப்பயல் அடிப்பது வலிக்கிறது.

கரு: [எழுந்து வருகிருன்]

சிங்: [கருப்பனைக் குத்துகிறான்]

கருப்: அப்பா !

சிங்: என்ன ? முழு மாடுபோல இருக்கிறாய் ! அப்பாவா ! அப்பாவை இந்த இடத்திலா நினைப்பது ? முட்டாள் [கருப்பனைத் தள்ளுகிறான்]

கருப்: [குப்புற விழுகிறான்]

கண்: [சிங்கனைக் குத்திக் கொண்டு] தொலைந்தாய்... !

சிங்: யாருடா தொலைவது பார் ! [கண்ணையனுக்கு முன்னால் நிற்கிறான்]

கண்: [கட்டாரியை எடுத்துச் சிங்கனைக் குத்த முயலுகிறான்] தொலைந்து போ !

சிங்: [கையால் தடுத்துப் பிடுங்கி கருப்பன் பக்கம் கட்டாரியை வீசி எறிந்தான். இருவரும் ஒருவரை ஒருவர் கட்டிப் புரளுகிறார்கள்]

கரு: [கையில் கட்டாரி அகப்படுகிறது. எழுந்து சிங்கனைக் குறி வைத்து எறிகிறான்.]

சிங்: [கண்ணையனை முன்னுக்குத்தள்ள கட்டாரி கண்ணையனுடைய நெஞ்சில் பாய்ந்துவிட்டது] மூடிந்தாய் போ !

வள்: அத்தான்! (அலறிக் கண்களை மூடிக்கொண்டாள்.)

கண்: [கீழே சாய்ந்து] கருப்பனண்ணே, என்னையல்லவா கொன்றுவிட்டாய் !

கரு: [ஓடிவிட்டான்.]

சிங்: [சாய்ந்து கிடக்கும் கண்ணையனைப் பார்த்து] கொடுமையாளனே! உன் கொடுஞ் செயலுக்குக் கிடைத்த பரிசு இது !

வள்: அத்தான், நேர்மை வெல்லும். வல்லாண்மை மடியும், நேரிலே பார்த்துவிட்டோம்.

சிங்: வா, வள்ளி! உன்னைக் குடிலுக்குள் விட்டு விட்டு, நான் வீடு போகிறேன். வள்ளி, நடந்ததைப்பற்றிக் கவலைப் படாதே

வள்: அத்தான்! எனக்கு அச்சமாய் உள்ளது.

சிங்: நீ ஏன் அஞ்ச வேண்டும் ?

வள்: உங்களுக்கு எந்தத் துன்பமும் வரக்கூடாதே !

சிங்: வள்ளி, இத்த நெறியற்ற குமுகாயத்தில், துன்பம் வரத் தான் செய்யும். என்றாலும், முறை வெல்லும். நானு கண்

ணையனைக் கொன்றேன். இல்லையே! கருப்பன் என்னைக் குறி வைத்தான்; அக் குறி தவறிக் கண்ணையனைக் கொன்று விட்டது. இதுதானே மெய்ம்மை. நீ ஏன் கவலைப்படுகிறாய்! வருவது வரட்டும்; பின்னால் பார்ப்போம். விரைவில் புறப்படு. நீ குடிலுக்கு வா. [சிங்கன் வள்ளியின் கையைப் பிடித்துக் கொள்ள, இருவரும் வேகமாக நடக்கிறார்கள்.]

சிங்: [வள்ளியைக் குடிலுக்குள் விட்டு விட்டு] வள்ளி, நான் போகிறேன். நீ மிக எச்சரிக்கையாக இரு. எங்கும் செல்லக் கூடாது. நான் உன்னைக் காணும்வரை வெளியில் செல்லாதே.

வள்: சரி அத்தான், நீங்கள் மிக எச்சரிக்கையாகச் செல்லுங்கள்.

சிங்: [போய்விட்டான்.]

வள்: [தாத்தாவின் அண்டையில் படுத்துக்கொண்டாள்.]

காட்சி கள.

உறுப்பினர்: சிங்கன், இரண்டு இளைஞர்கள், இரண்டு ஊர் பெரியோர், கருப்பனன், கண்ணையனின் பிணம், பிணத்தைச் சுமக்கும் இளைஞர் நால்வர்,

இடம்; நடைத்தடம்.

நிலை : சிங்கன் வள்ளியை அவளுடைய குடிசையில் விட்டு விட்டு வரும் வழியில் நான்கு ஊர்ப்பெரியோர் சந்திக்கின்றனர். முதலில், கருப்பனன் ஊரார் நால்வருக்கும் சிங்கனைச் சுட்டிக் காட்டுகிறான்.

கருப்பனன்: (கை நீட்டி) அதோ வந்து கொண்டிருக்கிறானே, அவன்தான் கண்ணையனைக் கொன்ற கொலைஞன்; பெயர் சிங்கன்.

பெரியோர்: அனைவரும் நில்லுங்கள். அவன் வரட்டும்.

கருப்: அவன் என்னமெல்லாமோ, சொல்லிக்கொலையை மறைப்பான். நீங்கள் விட்டு விடக்கூடாது, அவன் பெரிய புரட்டன்.

சிங்: (பெரியவர்கள் நிற்கும் பக்கத்திற்கு வந்துவிடுகிறான்),

பெரி: ஏய்! நில்! எங்கே போகிறாய்?

சிங்: எதற்காகக் கேட்கிறீர்கள்? நான் என் வீட்டிற்குப் போகிறேன். (போக முயலுகிறான்.)

பெரி 1: நான் சொல்லுவது காதில் ஏறவில்லை? நீ வீட்டிற்குப் போகக்கூடாது.

பெரி 2: நீ ஒரு கொலைஞன்.

சிங்: நானா? யாரைக் கொன்றேன்?

கருப்: (இளைஞர்கள் 1-2 பேரைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, முன்னுக்கு வந்து) ஒன்றுந் தெரியாதவனைப் போல நடிக்கிறாயா? கண்ணையனை நீதானே கொன்றாய்?! அது மட்டுமா? என்னையும் தாக்கினாய்! (உடம்பிலுள்ள காயங்களைக் காட்டி) அனைவரும் பாருங்கள் (சிங்கனைச் சுட்டிக் காட்டி) இவன் என்னைத் தாக்கிய காயங்களை.

சிங்: (கருப்பனைப் பார்த்து) ஆம்! நீ என்னைத் தாக்கினாய். நான் உன்னைத் தாக்கினேன். கண்ணையனைக் கொன்றது நானில்லையே!

சிங்: பொய், இவன் உண்மையை பூசி மெழுகுகிறான். (சிங்கனைக் கைநீட்டிக் காட்டி) பிடியுங்கள் இவனை.

இரு இளைஞர்கள்: (இரண்டிளைஞர்களும், சிங்கனைப் பிடித்துக் கொண்டு செல்லுகிறார்கள்-)

சிங்: (அவர்களுடைய பிடியில் இருந்து கொண்டு) யார் நீங்கள்?

கரு: (சட்டென்று) இவ்வூர் மன்றத்தார்.

சிங்: அப்படியானால், நான் சொல்வதைக் கொஞ்சங்கேளுங்கள்,

இளை 1: எங்களிடஞ் சொல்லிப் பயனில்லை, மன்றத்தில் அறங் கூறும் அறிஞர் நடுவில் உரைத்துக் கொள்.

நால்வர்: (கண்ணையனுடைய பிணத்தைச் சுமந்துகொண்டு நால்வர் வருகின்றனர்.)

பெரி 1: (பிணங் கொணர்வதைப் பார்த்து) இது கண்ணையனுடைய பிணந்தானே !?

பிணம் சுமக்கும் இளைஞர்கள்: ஆமாம். கண்ணையனுடைய பிணந்தான்.

பெரி 1: (இரண்டாம் பெரியவரைப் பார்த்து) பிணத்தை இறக்கச் சொல்லட்டுமா ?

பெரி 2: ஆம், இறக்குங்கள், (பிணத்தை சுமப்பவரைப் பார்த்து) மேலே மூடியிருக்கும் சீலையைச் சற்று அகற்றுங்கள்.

பிண-சுமக்-இளை: (சீலையை அகற்றுகிறான்.)

பெரி 1-2: (பிணத்தை நோக்குகிறார்கள்.)

பெரி 2: கொலைதான். கட்டாரியால் குத்திக் கொல்லப்பட்டதாலேயே கண்ணையன் இறந்துவிட்டான். இதில் எவ்வகை ஐயமும் வேண்டா. (பிணத்தைச் சுமந்து வந்தவரைப் பார்த்து) நீங்கள் இப் பிணத்தைக் கொண்டு சென்று, கண்ணையனுடைய உறவினரை அழைத்து அடக்கஞ் செய்து விடுங்கள்.

(சிங்கனை அனைவரும் பிடித்துச் செல்லுகின்றனர். கருப்பனும் உடன் செல்லுகிறான். சிங்கன் குனிந்தவாறு அவர்களோடு செல்லுகிறான்.)

[தொடரும்]

தமிழ் மண்ணினின்று சற்று மேற்கே சென்ற பின்பு ...

-சித்திரச் செந்தாழை ஆறிறைவன, அறி.மு.

மண்ணிலே கால் மூடி விளையாடிய காலம் முதற்கொண்டு, விண்ணை நிமிர்ந்து நோக்கும் பருவம் வரையிலே, நம் உள்ளத்தில் தோன்றி வளர்கின்ற உணர்வுகள்தாம் எத்தனை எத்தனை? அப்பப்பா! இன்னும் கூட தங்களிடம், தங்கட்குத் தேவையான ஒரு சிறிய பொருள்கூட இல்லாமல் ஏங்குபவர்கள் எத்தனையோ பேர் இருக்கின்றனர். நம் நாட்டைப் பற்றியோ, நம் மக்களைப் பற்றியோ, நம் நாட்டின் பொருளியல் நிலை, அரசியல், குமுகாயம், அறிவியல், பண்பாடு இவை பற்றியோ இப்போது இங்குக் கூறிக் கொண்டிருக்கத் தேவையில்லை. ஏன் எனில், நம் நாட்டு மக்கள் ஒவ்வொருவருமே இதனுள் அமிழ்ந்து, இதனால் ஏற்படுகின்ற அனைத்து விளைவுகளையுமே ஏற்றுக் கொண்டிருப்பார்கள்.

எப்படிப்பட்ட மொழி, இன வேறுபாடுகள் இருப்பினும், பொதுவாக நம்நாட்டு உண்மைகளை அனைவருமே தெரிந்து வைத்திருக்கின்றனர். இதே மனவுணர்வில் பிறந்து வளர்ந்து ஆளாகிய பின்பு, அதே காலத்தில் நம நாட்டை விட்டு மேற்கத்திய நாடுகளுக்குச் சென்று போய் இறங்கினால் அஃது ஒரு தனி உலகம்போல் தான்! ஆம். சிறு அகவை முதற்கொண்டு, பழம்பெரும் கதைகளைப் படித்தோ, பாட்டிமார்கள் கதை சொல்லியோ, பழைய திரைப் படங்களைப் பார்த்தோ இன்னும் சற்றே மிகையான கற்பனையில் நம் மனக்கண்களின் முன்பு தோன்றியிருக்கிற "இன்ப உலகம்" என்று அதைச் சொல்லலாம். இவ்விடத்தில் முகாமையமாக ஒன்றைச் சொல்லப்போனால், நாட்டுத் தூய்மையை, மக்களின் உயர் நிலையை வைத்து அவ்வாறு சொல்வதைக் காட்டிலும், ஒவ்வொருவர் மனத்திலும் உள்ள இன்பமான விடுதலையுணர்வை வைத்துத்தான் அவ்வாறு கூறமுடியும். 'விடுதலை' என்றும், எந்த ஒரு கவலையுமின்றி, வானில் பறந்துதிரிகின்ற பறவைகளைப்போன்ற உணர்வு, ஒவ்வொருவர் உயிரிலும், உயிர்க்கும்போதே தோன்றி விடுகிறது.

நம் நாட்டுப் போராட்டங்களின் அடிப்படைக் காரணங்களாகிய அரசியல், பொருளியல், மொழிச்சிக்கல், பின்தங்கிய அறிவியல் ஆகிய இவையனைத்துமே இங்கு எந்தவகைத் தடங்கல்களோ, சிக்கல்களோ இன்றி முன்னேற்றம் பெற்றுக் கொண்டுள்ளன. அமைதியான முறையில் அரசு நடைபெறுகிறது.

பொருளியல் நிலையைப்பற்றிச் சுருக்கமாகச் சொன்னால். பெரும்பாலும் இங்குச் சேமிப்பே தேவையில்லாத ஒன்றாய் உள்ளது,

வைப்பகம் (Bank) என்பது ஒவ்வொருவர் பணிக்குரிய ஊதியத்தை வாங்கிக் கொடுக்கும் வேலைக்கே பயன்படுவது போல் இயங்குகிறது.

குறிப்பாகச் சொன்னால், இங்குள்ள எல்லாவகையான உணவுப்பொருள்களின் மதிப்பும் மிகக்குறைந்த விலையில் விற்கப் பெறுகின்றன. எனவே, உணவுத் தொடர்பான நிலையில் யாருக்கும் எந்த ஒரு குறைபாடும் இல்லை. மிகக் குறைந்த அளவு ஊதியம் வாங்குபவர்கள் கூட மூன்றில் ஒரு பகுதியை மட்டுமே உணவுக்கென செலவழிக்க முடியும்.

உடை நிலையில் பார்த்தால், இப்படித்தான், இதைத்தான் உடுக்கவேண்டும் என்பதில்லை. யார் வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும், தம் உள்ளம் விரும்பும் உடைகளைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம். இங்கு அணிபவர்கள் அனைவருமே, ஏற்கனவே அணியம் செய்த உடைகளையே (Ready-made) பயன்படுத்துகிறார்கள். தையற்காரர்களே கிடையாது. எனவே, உடைகளைப் பொறுத்தவரை மலிவாகவும், விலை மதிப்பாகவும் இருக்கும். எதைப் போட்டுக் கொண்டாலும், மக்களின் மேலுள்ள மதிப்பைக் குறைப்பதோ, அதிகப்படுத்துவதோ இம் மக்களுக்குள் இல்லை. எனவே, உடை நிலையிலும் எந்த ஒரு குறையுமே யாருக்குமே இருக்கவில்லை.

அடுத்து, இருப்பினும் இங்குள்ள எல்லா வீடுகளுமே, போதுமான, தேவையான ஏந்துகளை யுடையனவாகவே இருக்கும். அவரவர் ஊதியத்தில் 4 அல்லது 5 இல் ஒரு பகுதியை வீட்டிற்கென ஒதுக்கலாம். தண்ணீர்த் தட்டுப்பாடோ, அக்கம் பக்கத்தாரின் நச்சுப் பேச்சுகளின்தொல்லைகளோ எதுவும இன்றி, அவரவரும், தாம் உண்டு, தம் வீடு உண்டு என்ற அளவில் வாழ்க்கை நடத்தும்- அடுத்த வீட்டுக்கே சிறிதும் தொடர்பில்லாத தனித்த பகுதியைப் பெற்றிருக்கின்றனர்.

எனவே, பொருள் நிலையில் அதிகமாக நம்மைச் சிக்கல்படுத்துகின்ற உணவு உடை, உறையுள் ஆகிய மூன்றிலுமே, கடுகளவும் துன்பம் உறுது, இன்னும் சொல்லப்போனால், அவற்றினால் ஏற்படக் கூடிய துன்பங்களையே இன்னவென்று உணராத மக்கள் 98 விழுக்காட்டினர் இங்கு உள்ளனர்.

அடுத்து, மொழி நிலையில் தாயின் வாய்வழி கற்றுக்கொள்ளப் பெற்ற அதே மொழியை, தம் வாழ்நாள் முழுவதும் ஒரே மொழியாய், மதிப்பாய் போற்றிக் காப்பாற்றுகின்றனர். ஒரு சிறு அளவுங்கூட ஆங்கிலத்தைக் கலக்காது (ஆங்கிலம் தெரிந்தவர்கள் கூட) மிகத் தூய்மையாகப் பேசும் அம் மக்களைக் காணும்போதே, அவர்களின் மொழிப்பற்றை எண்ணி மகிழ்வடைந்தாலும்,

நெஞ்சின் ஓர் ஓரத்தில் ஒருவகையான நிறைவடையாத ஏக்கப் பெருமூச்சு வராமல் இல்லை. அவர்கள் மொழியில் பேசுவதே மதிப்பு என்றும், பெருமை என்றும், சிறப்பு என்றும் ஒவ்வொருவருமே நினைப்பதை நன்றாக உணர முடிகிறது. தம் மொழி மட்டுமே தெரிந்திருப்பதால், வெளிநாட்டில் போய் எப்படி வாழ்வது? என்ற ஒரு கேள்வி, நம் நாட்டில் இருக்கும் மக்களின் உள்ளத்தே எழலாம். இவர்கள் பிற நாட்டிற்குச் சென்று வாழவேண்டிய தேவை முதலில் இல்லை. அங்ஙனம் இன்றியமையாத ஒரு நிலையில் கல்வித் தொடர்பாகவோ, பணித்தொடர்பாகவோ தம் நாட்டை விட்டுப் பிற ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்பவர்கள் அந் நாட்டு மொழியைக் கட்டாயம் கற்று, அதன் பின்பு அப் பிறநாட்டு மொழியிலேயே அம் மக்களுடன் தொடர்பு கொள்கின்றனர். எனவே, மொழி நிலையில் அம் மொழியை-தாய் மொழியை-தெய்வ மொழியாகக் கருதுகின்றனர். அவர்களின் பற்று இயல்பானதாகவே இருக்கிறது. “மொழி வெறி” என்ற சொல்லுக்கே அங்கு இடமில்லை.

அடுத்து, அறிவியலில் மிகவும் முன்னேறிய நிலை. இந் நிலையில் சப்பான், உருசியா, அமெரிக்கா, ஐரோப்பா ஆகிய நாடுகள் முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருந்தாலும், எல்லா நாடுகளுக்கும் உள்ள முன்னேற்றங்களின் தரம் அதிக வேறுபாட்டைத் தரவில்லை. அறிவியல் உணர்வு இங்குப் பிறந்த குழந்தை, உலகை நோக்கிய பின்பு, தாம் காணும் கடைசிப் பொருள்களைப் பிரித்துரைக்கத் தொடங்கும்போதே,அறிவியல் ஊட்டப்பெறுகிறது. அக் குழந்தைப் பருவத்தில் சிறு சிறு விளையாட்டுப் பொருள்களில் அதிகமாக ஈடுபடும்பொழுதே அறிவியலின் நுட்பங்களை மெல்ல மெல்ல உணர்ந்துகொண்டு வருகிறது. அந்த நுட்பங்களின் திரட்சியே அந்தந்த நாடுகளுக்குப் பெரிய விளைவுகளை ஏற்படுத்தித் தருகின்றன. தனி மாந்தன் ஒருவனுக்குத் தேவைப்படும் கருவிகள் முதற்கொண்டு, உலகளவிற்குத் துணைப் போகும் விண்வெளிக் கலங்கள் வரை, அனைத்து மக்களுக்கும் பெரும் உதவியாகவே இயங்குகின்றன. இப்படியாக மக்கள் வாழ்வதற்கு எல்லாவகையிலும் இடர்ப்பாடுகள் (நம்நாட்டில் உள்ள சிக்கல்கள் போன்ற) ஏதுமின்றி விடுதலை உணர்வுடன் மக்கள் வாழ்கின்றனர்.

மேற்கண்ட நிலைதான் இன்றைய ஐரோப்பிய நிலை. இப்படிப்பட்ட நிலை எப்படி வந்தது, தொடக்க நிலை என்ன, என்பதுபற்றியும், ஐரோப்பிய நாடுகளிலே, ஏன், உலக அளவில் எடுத்துக் கொண்டாலும் கூட, சிறப்பு நிறையப்பெற்ற, அமைதியான அரசியல் முறை கொண்ட, பொது மக்களிடையே எந்தவகையான கருத்துச் சிக்கல்களும் இல்லாத, எந்தவகையான பொதுவான அச்சங்கள் (கொலை, கொள்ளை, களவு முதலான) ஏதுமின்றித்

102 நாடுகளில் உருசிய மொழி !

அயல் நாடுகளுடன் நட்புறவு மற்றும் கலை, பண்பாட்டு உறவுகளுக்கான சோவியத்துக் கழகங்களின் ஒன்றியத்தால் நடத்தப்படும், உயர் நிலை உருசிய மொழிப் பயிற்சி வகுப்புகளில், 30 நாடுகளைச் சேர்ந்தவர்கள் கல்விப் பயிற்சியை முடித்துள்ளனர். பட்டம் பெற்றவர்களில், அயல் நாடுகளில் உள்ள சோவியத்து நட்புறவுக் கழகங்களின் உறுப்பினர்கள், உருசிய மொழி ஆசிரியர்கள் உலகின் பல்வேறு உயர் கல்வி நிறுவனங்களில் உள்ள சிலாவ் மொழித் துறை மாணவர்கள் ஆகியோர் அடங்குவர்.

கடந்த 25 ஆண்டுகளாக நடைபெற்று வரும் இந்தப் பயிற்சி வகுப்புகளின் மூலமாக, 2,000-க்கும் மேற்பட்டோர் உருசிய மொழி அறிவை வளர்த்துக் கொண்டுள்ளனர். மாசுகோவில் உள்ள ஏ. எசு. புட்கின் உருசிய மொழிக் கல்வி நிலையத்தைச் சேர்ந்த மொழி நூல் வல்லுநர்களே இந்தப் பயிற்சி வகுப்புகளை நடத்துகின்றனர். இந்த மொழிக் கல்வி நிலையத்தின் கிளைகள் மங்கோலியா, அங்கேரி, செக்கோசுலோவேக்கியா, கியூபா, ஆப்கானித்தான், வியட்நாம் ஆகிய நாடுகளில் செயல்படுகின்றன.

இன்று, உருசிய மொழி, உலகிலுள்ள 102 நாடுகளில், 2 கோடிக்கும் மேலான மக்களால் பயிலப்படுகிறது. உருசிய மொழியில் திறமான புலமை பெற்றவர்களுக்கு, உருசிய மொழி மற்றும் இலக்கிய ஆசிரியர்களின் அனைத்து நாட்டுக் கழகம், மாபெரும் உருசியப் பாவலர் புட்கின் பெயரால் அமைத்த விருதினை அளித்துப் பெருமைப்படுத்துகிறது.

(முன் பக்கத் தொடர்ச்சி)

தலை நிமர்ந்து, நடு இரவிலும் சாலையில் நடந்து செல்லும் துணிவான நிலைகளைப்பெற்ற ஒரே நாடாகிய **சுவிட்சர்லாந்தைப்** பற்றி அடுத்துப் பார்ப்போம்.

ஏற்கனவே அந் நாட்டைப்பற்றி நாம் படித்திருப்போம். அ∴து, **"உலக விளையாட்டுத் திடல்"** என்று அழைக்கப்படுகிறது. இங்குக் காண்கின்ற காட்சிகளும், அறியப்படுகின்ற செய்திகளும், உணரப்படுகின்ற உணர்வுகளும் நம் நாட்டிற்கு முழுமையாகவே வேறுபட்டவை. ஒன்றே ஒன்று சொல்லலாம். நம்நாட்டு மக்களையும், இங்குள்ள மக்களையும் நாடு மாற்றிக்கொண்டாலும், அதே நிலைதான் இருக்கும். இங்குள்ள சுவிசு மக்கள் அங்கு வந்தால் நம்மைப்போல்தான்வாழ முடியும். அங்குள்ள மக்கள்இங்குவந்தாலும் இவர்களைப்போல் ஆகிவிடுவர். ஆனால், இந்தியா சுவிட்சர்லாந்தாக மாறுவதற்கு எத்தனை ஆண்டுகள் ஆகுமோ கணக்கிட்டுச் சொல்ல முடியாது.

இப்படிப்பட்ட எல்லா வகையிலும் சிறப்புப் பொருந்திய அந் நாட்டினைப்பற்றி விளக்கமாகவும், முழுமையாகவும், அனைவரும் அறிந்துக் கொள்கின்ற காலம் விரைவில் வரும். எனினும், நம் தமிழகப் பண்பாடு நம் உள்ளத்தே தலைசிறந்து விளங்குவதை இறுதியில் உணர்வோம்.

செய்திகள்

1. புலவர். இரத்தினவேலு-தமிழ்ச்செல்வி வாழ்க!

இரத்தின அரங்கராசன்-சின்னப்பாப்பா வாழ்க!

கடந்த கும்பம் 29 (13-3-86) ஆம் பக்கல், தஞ்சை, மருத்துவக் கல்லூரிச் சாலை, மங்களபுரம், அண்ணாமலை திருமணக் கூடத்தில், சாணூராப்பட்டி புலவர் **இரத்தின வேலுவுக்கும்,** மனையேறிப்பட்டி செல்வி, **தமிழ்ச் செல்விக்கும்,** அடுத்து, செல்வன் **இரத்தின அரங்கராசனுக்கும்** செல்வி **சின்னப்பாப்பாவுக்கும்,** நமது கழகத் தலைவர், பெருமைமிகு **எசு. டி. சோமசுந்தரம்** அவர்கள் தலைமையில் சீரும் சிறப்புமாகத் திருமணம் நடைபெற்றது. பாவலரேறு **பெருஞ்சித்திரனார்** அவர்கள் சிறப்பு வாழ்த்துரை வழங்கினர். மற்றும் உயர்திருவாளர்கள் துரை. கோவிந்தராசன் ச. ம. உ. எம். ஆறுமுகசாமி, புலவர் முருகையன், தஞ்சை அ. இராமமூர்த்தி, கோ. இளங்கோவன், பொன். கலியமூர்த்தி, அழகு. திருநாவுக்கரசு, அழகிரிபாலன், பேரா. சாத்தையா, கு. தங்கமுத்து, வழக்கறிஞர் எம். கே கதாதரன், துரை திருஞானம் ஆகியோர் ஈரிணை மணமக்களையும் வாழ்த்தி நல்லுரை வழங்கினர். இறுதியில் இரா. கலியமூர்த்தி நன்றியுரை கூறிட மணவிழா இனிதே நிறைவுற்றது.

2. கதிர்மதியன் (இரவிச்சந்திரன்) - சாரதா வாழ்க!

சென்ற மீனம் மாதம் 31-(13-4-86) ஆம் பக்கல், வேலூர் செய் பாரத் டேனர்சு, கணக்கியல் அதிகாரி, செல்வன் **கதிர்மதியன்** என்னும் **இரவிச் சந்திரனுக்கும்,** திருமுதுகுன்றம் புனித ரோசரி இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளி முதல்வர் செல்வி **வெ.சாரதா** வுக்கும், சிவகாசி, அணில் பாவநாசர் சீதாலட்சுமி அம்மாள் திருமண மண்டபத்தில், பாவலரேறு **பெருஞ்சித்திரனார்** அவர்கள் தலைமையில் திருமணம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. தலைவர் அவர்களின் மணவினை நிகழ்த்தம், வாழ்த்துரை முதலியவற்றுக்குப் பின்னர், உ. த. மு. க. துணைப்பொதுச் செயலர் திரு **தென்னவன் கோ,** உ. த. மு. க. தலைமைக் கழகப் பொறுப்பாளர் திரு. தென்மொழி ந. முத்துக்குமரனார், சிவகாமி சட்டப் பேரவை உறுப்பினர் திரு. பாலகிருட்டிணன், கும்முடிப்பூண்டி சட்டப் பேரவை உறுப்பினர் திரு. ஆர். எசு. முனிரத்தினம், திருவள்ளூர் ச. பே. உ. திரு. பட்டாபிராமன், சட்டமேலவை உறுப்பினர் திருவாட்டி வி. செயலட்சுமி - ஆகியோர் மணமக்களை வாழ்த்தி நல்லுரை வழங்கினர். இறுதியில் திரு. வி. வேங்கடசாமி நன்றியுரைக்குப் பின் மணவிழா இனிதே நிறைவுற்றது.

3. பெங்களூர் தமிழ்ச்சங்கம்:

தமிழாசிரியர்துறை மற்றும் இளைஞர் துறை தொடக்க விழா

கடந்த 20-7-86 காலை 11 மணியளவில் வெங்காலூர் (பெங்ளூர்) தமிழ்ச்சங்கக் கட்டிடத்தில், திருவள்ளுவர் கலையரங்கத்தில் தமிழாசிரியர்துறை மற்றும் இளைஞர்துறைகளின் தொடக்கவிழா நடைபெற்றது. விழாவிற்குப்புலவர் **காமராசர்**(தமிழாசிரியர்,புனித மரிடன்னை உயர்நிலைப்பள்ளி) அவர்களின் தலைமையில் நடைபெற்றது தொடக்கத்தில் தமிழ் வாழ்த்துக்குப்பின் இளைஞர் துறைப் பொறுப்பாளர் திரு. மா. விசயபூபதி வரவேற்புரை நிகழ்த்தினார். அதன் பின்னர் தலைவர்,இன்றைய ஆசிரியர்கள், இளைஞர்கள் மாணவர்கள் ஆகியோர் நிலை பற்றியும் தொடங்கவிருக்கும் துறைகளின் தேவை பற்றியும் முன்னுரை யாற்றினார். அவரைத் தொடர்ந்து, தென்மொழி **ந. முத்துக்குமரனார்** மாணவர்களின் இன்றைய நிலைபற்றிக் கூறி, அவர்களை ஆசிரியர்கள் எவ்வாறு நெறிப்படுத்த வேண்டும் என்பது பற்றி நல்லதோர் உரையாற்றினார். இறுதியில் பாவலரேறு **பெருஞ்சித்திரனார்** அவர்கள், துறைகளைத் தொடங்கி வைத்து, மாணவர்களின் இன்றைய நிலை பொதுவாகவே எங்கும் உள்ள நிலைதான் என்றும், மேனாடுகளில் அவர்களின் தொடக்கநிலையே செப்பமுடையதாக அமைக்க பெறுவதாகவும், அதன் பின்னர் அறிவியல் நிலையிலும் பொதுமைநிலையிலும் அவர்கள் வளர்த்தெடுக்கப் பெறுவதாகவும், நம் நாட்டில் அவ்வாறு வளர்வதற்கு வாய்ப்பில்லை என்றும், அதற்கு ஆசிரியர்களே கரணியம் என்றும்,அவர்கள் தங்களை மொழியாசிரியர்களாகக் கருதாமல் தொழிலாசிரியர்களாக் கருதிக் கொள்கிறார்கள் என்றும் இது தவறான கோட்பாடு என்றும் விளங்கக் கூறிச் சிறப்புரை யாற்றினார். இறுதியில் நன்றியுரைக்குப் பின் விழா இனிது நிறைவுற்றது.

4. உலகத்தமிழ்க் கழகம்-சீராமபுரக்கிளை:
புரட்சிப் பாவேந்தர் விழா:

சென்ற கடகம் ௪ (20-7-86) அன்று மாலை 6 மணியளவில் வெங்கலூர், சீராமபுரம், சாயிபாபாநகர் திருமண மண்டபத்தில், உலகத் தமிழ்க் கழகம் சீராமபுரக் கிளையின் தொடக்க விழாவும், புரட்சிப் பாவேந்தர் விழாவும் இனிதே சிறப்புற நடைபெற்றன. விழாவுக்கு அதன் அமைப்பாளர் திரு. **க. அரசு** தலைமை தாங்கினார் அதன் தலைவர் திரு. **ப. அரசு** வரவேற்புரை யாற்றினார். வரவேற்புரையைத் தொடர்ந்து திருவாளர்கள் **கோவி.பாவேந்தன்** (செயலாளர்), **முத்துச் செல்வன்**, தென்மொழி **ந. முத்துக்குமரனார்**. **அ. ம. குழற்கோமான்** ஆகியோர் வாழ்த்துறை யாற்றினர். றினர். இறுதியில் பாவலரேறு **பெருஞ்சித்திரனார்** பாவேந்தரின் உறைத்த கொள்கைப் பாடுகளையும், தமிழினத்தின் மொழி, இன,

நாட்டு அடிமைத்தனங்களையும், அவற்றினின்று இத் தமிழினத்தை மீட்டெடுக்கும் அருமைப் பாடுகளையும் விளக்கமாக ஒன்றரை மணி நேரம் சிறப்புற எடுத்துரைத்தார். விழாவிற்கு ஏராளமானஉள்ளூர் வெளியூர் அன்பர்களும் மகளிரும் வந்திருந்து சிறப்புச் செய்தனர். இரவு 10 மணியளவில் விழா சிறப்புற நிறைவுற்றது. வெளியூர் அன்பர்களுக்கு இரவு உணவு அமைப்பாளர் திரு. **க. அரசு** அவர்களின் இல்லத்திலே வழங்கப் பெற்றது.

காலை நடந்த தமிழ்ச் சங்க விழாவிற்கும், மாலை சீராமபுரத்தில் நடந்த பாவேந்தர் விழாவிற்கும பலடத்திலிருந்து கோவை மாவட்ட அமைப்பாளர் திரு. **மா. ஆறுமுகனர்**. தென்மொழி **ந. முத்துக்குமரனர்**, உ. த மு க தலைமைக் கழக அமைப்புச் செயலர் **ப. துரையரசனர்** தென்மொழித் தம்பிகள் சீனி செந்தேவன் செ ஈசுவரமூர்த்தி, சு சுப்பிரமணியன் ஆகியோர் வந்திருந்து நிகழ்ச்சிகளைச் சிறப்பித்தது குறிப்பிடத்தக்கது.

புதின இயக்கத்தின் கடமைகள்!

இலக்கியம் என்றுமே காலத்தின் உணர்வுகளையும், மாந்த நேய நோக்கங்களுக்காக. காலங் காலமாக மாந்தன் நடத்திவரும் போராட்டங்களையும் எதிரொலித்து வந்துள்ளது. ஒன்று, உலகம் கடுமையான ஓர் ஆய்வுக்கு உள்ளாகியிருக்கும் சமயத்தில், அமைதியைப் பாதுகாப்பதைக் காட்டிலும், எழுத்தாளர்களுக்கு வேறு மேலான பணி எதுவும் இருக்கமுடியாது என புகழ்மிக்க சோவியத்து எழுத்தாளர் சிங்கிசு ஐத்மாத்தவ் கூறியுள்ளார்.

மாசுகோவில், சூன் 24 ஆம் பக்கல் நடைபெற்ற, சோவியத்து எழுத்தாளர் மாநாட்டின் தொடக்க விழாவில் பேசும்போதே அவர் இவ்வாறு சொன்னார். உலகில் மிக அதிகமான வாசகர்களால் விரும்பப்படும் எழுத்தாளர்களில் இவரும் ஒருவர். இவரின் நூல்கள், ஏறத்தாழ 90 மொழிகளில் வெளிவந்துள்ளன.

இந்தச் சிக்கலான கால கட்டத்தில், வாழ்க்கையை அழிக்கத்துடிக்கும் ஏதமான ஆற்றல்களோடு, ஒத்துப்போக முடியாது என்ற உணர்வை, மக்கள் நடுவில் உருவாக்குவதே இலக்கிய எழுத்தாளர்களின் கடமையாகும். மாந்தன் அமைதியாக வாழ்வதற்கு உள்ள உரிமை என்பது, வெறும் உடலளவில் வாழ்ந்திருப்பது மட்டுமன்று. போர் ஏதம் என்னும் அச்சத்திலிருந்து விடுபட்ட, மாந்த மனச்சான்றினால், ஆக்க முழுமையான ஆற்றல்களை, அளப்பரிய முறையில் வெளிப்படுத்த இயலும். அதனுடைய ஆக்க முழுமையான பலன்கள், கற்பனைக்கும் எட்டாதவை. அன்றாட வாழ்க்கையிலிருந்து, என்றென்றும் அணுக் கருவிகள் அகற்றப்பட வேண்டும் என்பதே மாந்தக்குலத்தின் உடனடிக் கோரிக்கையாகும்.

இவ்வாறு சிங்கசு ஐத்மாத்தவ் பேசினார்.

(16 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

சாதி ஒழிப்பிற்கு எடுத்துக்காட்டாகப் பாடப் படுகிறது. இக் கதையை ஆய்ந்த திருவாளர் **நா.வானமாமலை** அவர்கள் "**முத்துப் பட்டன் கதை** என்ற நூலில் குறிப்பிடுவதைப் பார்த்தால், பார்ப்பனர்களின் சூழ்ச்சியை நன்கு அறிந்து கொள்ளலாம். தமிழர்களுடைய கலைகள் பார்ப்பனிமாக்கப்பட்ட வரலாற்றுக்கு இக் கதை ஓர் எடுத்துக்காட்டு. இந்நூலை மதுரை காமராசு பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ளது முத்துப்பட்டன்கதை உண்மை வரலாறு என்றே அவர்கள் கருதுகிறார்கள். இக்கதையில் வரும் தலைவன் முத்துப் பட்டன் பார்ப்பனர் குடும்பத்தில் பிறந்தவன். தலைவியர்பொம்மக்கா, திம்மக்கா ஆகிய இரு பெண்களும் சக்கிலியர் வகுப்பில் பிறந்தவர்கள். பெண்களின் தந்தை பெயர் வாலப்பகடை. பார்ப்பான முத்துப்பட்டன் வாலப்பகடையின் மக்களாகிய பொம்மக்காள், திம்மக்காள் ஆகிய இருவரை மணக்கிறான்". (நூலில் 16 ஆம் பக்கத்தில் ஆசிரியரின் கூற்று)

கதையின் உயிர் நாடியே கீழ்ச்சாதியில் பட்டன் மணஞ்செய்து கொண்டது, அவர்கள் வாழ்க்கையில் இணைந்து ஒன்றுபட்டது' எனக் கூறுகிறார். பார்ப்பான் சாதியில் பிறந்த ஒருவன், கீழ்ச்சாதி என்று கருதப்பட்ட சக்கிலியர் பெண்களை மணம் முடித்துக் கொண்ட வரலாற்றைப் பாட, பார்ப்பானுக்கும் அவர்களுக்கும் அடிமையாய் வாழும் மேல் சாதிக்காரர்களுக்கும் பொறுத்துக் கொள்ள முடியாமல் கதையை மாற்றுவதற்கான முயற்சிகள் செய்யப்பட்டுள்ளன. அதற்காகப் பார்ப்பனரும் அவர்களுடையஅடிமைகளாகிய மேல் சாதிக்காரர்கள் என்று தங்களை எண்ணிக்கொண்டு வாழும் சிலரும், இக் கதையை வில்லுப்பாட்டில் பாடிவரும் **முத்துப் புலவர்** என்பவரை அணுகிக் கதையை மாற்றிப் பாட ஏற்பாடுகள் செய்துவிட்டனர். அந் நூலின் 15 ஆம் பக்கத்தில் இப்படிக் குறிக்கப்பட்டுள்ளது.

"பொம்மக்காவும், திம்மக்காவும் பகடையின் மக்களென்றே பாடி வந்திருக்கிறார்கள். ஆனால், 25 ஆண்டுகளுக்கு முன்னால் சில பிராமணர்களும், உயர் சாதிக்காரர்களும் கதையை 'ஆட்சேபி'த்தார்களாம். பிராமணன் சக்கிலியப் பெண்களைத் திருமணம் செய்து கொள்ளும் கதை, என்ன கதை என்று பகடி செய்தார்களாம். சொரிமுத்து ஐயர் கோயிலுக்கு (சொரிமுத்து ஐயர் கோயிலில்தான் இக்கதை பாடப்படுகிறது) மேல் சாதிக்காரர்கள் அதிகமாக வருவதால் இக் கதையை மாற்றவேண்டுமென்றெண்ணி, முத்துப் புலவர் அவ்வாறே மாற்றிவிட்டாராம். உண்மையில், பொம்மக்கா, திம்மக்கா இருவரும் சக்கிலியப் பெண்கள்தா'மென்று அவர் சொன்னார்".

(தொடரும்)

வசாறுகளை அந்த பலுக்கலுடன்தாம் எழுதிக்காட்டல் வேண்டும் என்றால், தமிழ் மொழிக்கு ஒன்று, தனிவகை எழுத்துகளைக் கண்டுபிடித்தல் வேண்டும்; அல்லது மேதாவிகள் சிலர் சொல்வது போன்று தேவநாகரி வரிவடிவங்களைப் பயன்படுத்தல் வேண்டும். ஏனெனில், தமிழில் இன (வர்க்க) எழுத்துகள் இல்லையே! மேலும் பிற மொழிக்காரர்கள் தமிழ்ச் சொற்களை எழுதும் பொழுது தத்தம் மொழியியல்புகட்கேற்பவேதாம் எழுது கின்றனர்.

தமிழ்ச் சொற்களான வால், வாள், வாழ் ஆகிய மூன்றை யுமே அப்படியே ஆங்கில வரிவடிவில் எழுத எண்ணும் ஆங்கிலன் ஒருவன் VAL என்றுதானே எழுதுவான்? அவனுக்கும் அவனு டைய மொழிக்கும் ஒரு நயன்மை. நமக்கும் நம் மொழிக்கும் வேறொரு நயன்மையா? அன்று வடபுலத் தமிழர்கள் தம் மொழி யில் ஜ, ஷ, ஸ, க்ஷ, ஹ, முதலிய வடிவங்களை அமைத்துக் கொண்டதனாற்றான் தமிழ் மொழி பிராகிருதமொழி எனப்பெயர் மாற்றம் பெற்றது. இதில் க்ஷ என்னும் எழுத்து க்,ஷ ஆகிய எழுத்துகளின் கூட்டெழுத்தே ஆகும். தமிழை அதன் இயல்பிற் சரியாகவும் செப்பமாகவும் பேசுவதும் எழுதுவதுமான நேரிய முயற்சியின்மையால்தான் பேசிய சொற்களின் ஒலி வடிவங்கள் வேறுபாடுற்றன. இன்றும் தமிழகத்தில் இவ் வழக்கம் உள்ளது. இம்மடலின் பிற்பகுதியில் இதுவிளக்கப் பட்டுள்ளது. தம் சோம்ப லினால் புதிய ஒலி எழுத்துகளை ஆக்கிக் கொண்டதனால் தம்மைத் தமிழர் என்னும் கூட்டிலிருந்து பிரித்து, மொழியாலும் இனத் தாலும் வேற்றவர் ஆயினர். இதனால் எந்தமிழ் மொழி ஆட்சிப் பரப்பும், எந்தமிழினத் தொகை அளவும் குறைவுற்றன. அண் மைக் காலத்தில் வேற்று மொழியான மலையாளம் போலும் இன்னொரு மொழிப் பிரிப்புத் தமிழிலிருந்து ஆகத்தான் வேண்டுமா!

அறிவியல் சொற்களைத் தமிழில் எழுதிக் காட்ட முடியாது என்பது தங்களின் தற்போதைய கருத்தா, ஐயா? அறிவியற் கருத்துகளைத் தமிழில் வெளியிடல் இயலாதா? இன்று அறிவியல் என்று சொல்லப் பெறும் பிற நாட்டு-பிறமொழிக் கண்டு பிடிப்பாளர்கள் தத்தம் மொழிகளில் வெளியிடுங் கருத்துகளைத் தமிழில் வெளியிட முயற்சி இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். இன்னும் இதற்கெல்லாம் மேலான ஓர் உண்மை என்ன வென்றால், தமிழ்ஆட்சி இல்லையாதலால் கவனிப் பாரற்றுக் குப்பையிற் கிடக்கும் வயிரம்போல் இன்று தமிழ் உள்ளது. இதற்கான முயற்சியி லீடுபடாமல் யார் வேண்டு மானாலும் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம் என்னும் நிலையிலிருக்கும் தமிழின் மேல் தாங்களும் கைவைக்க எண்ணுதல் வேண்டாம், நிப்பான் என்னும், அந்த நாட்டைச் சப்பான் என்று சொன்னால்- எழுதினால் எந்தத் தமிழருக்குப் புரி யாமல் போய் விடும்? இல்லை, இப்படிச் சொன்னால் எழுதினால் நம்மீது யாராவது வழக்குத் தொடுப்பார்களா?

தமிழின் தனித்தன்மையைக் கட்டிக்காக்க இரக்கங் கண்ட நாம்- வேறுயாரும், எந்த ஓரியக்கமும் இவ்வகையில் தொண் டாற்றவில்லை. (உண்மை இதுதான் என விளக்கந்தரும்) நாம் இதைச் செய்தல் நயமா, சரியா என உரிமையுடன் கேட்கி றேன், நமக்கும், விசிறியைப் பேன் (Fன்) என எழுதும் 'துக்ளக்' 'சோ'விற்கும் என்ன வேறுபாடு இருக்கிறது என்பது எனக்கு விளங்க வில்லை. ஜெர்மனி என்பதைச் செர்மனி என்று தொடக்க நிலைக்கல்வி வகுப்புகளிலிருந்தே படித்துவருகின்றோம்.

தமிழில் படிப்பதும், பேசுவதும், எழுதுவதும் நமக்காகவே யொழியப் பிறர்க்காக அன்று. நம் தமிழ் மக்கள் விளங்கிக் கொண்டால், அதுவே போதும். இம் முறைக்கு மாருக இராஜாஜி என்பது போன்றுதான் எழுதல் வேண்டும் எனத் தமிழாட்சி யாவது கிமிழாட்சியாவது என நம்பிக்கை யற்று ஒரு முடிவுக்கு வருவோமாளுல்,இந்த வழக்கம் மேலும் வளர்ச்சியுற்று'ராஜாஜி; என்றெழுதுமளவுக்கு வந்து விடும் என அஞ்சுகிறேன்.மீண்டும் மணிப்பவள நடை ஏற்றமுறும். மீண்டும் வேதாளம் மரத்தில் ஏறிக்கொள்ளும். பழைய குருடி கதவைத் திறடி ! மீண்டும் ஒரு பாவாணர் பிறக்கவேண்டும். அவரின் அருமை மாணவராம் ஒரு பெருஞ்சித்திரளுரும் இருத்தல் வேண்டும். தமிழ் வளர்ச்சியும் காப்பும் சருக்குமர விளையாட்டுத்தானே !

அன்றிருந்த வழக்கம் இன்றுந் தொடர்ந்து வருவதைக் காண லாம். தென் மாவட்டங்களாகிய பாண்டி மண்டலத்தில் மெல் லோசையில் வழங்கப்பெறும் சொற்கள் பிற மாவட்டங்களில் எடுப்பொலி பெற்று வட சொற்கள் போன்று வழங்கப்பெறு கின்றன. நானறிந்தவற்றுள் சிலவற்றைக் கீழே தருகின்றேன்.

	பாண்டி மண்டல வழக்கு	பிற மாவட்டங்களின் வழக்கு
1.	சீரகம்	ஜீரகம்
2.	மல்லி	Dhaniya
3.	பூவணியாறு (பவானி-Pavani)	Bhavani Nadhi
4.	பண்ணுரியம்மன் (பண் + ஆர்)	Bannari Amman
5.	கணபதி (கண்-கணம்)	Ganapathi
6.	கவுண்டர்	Goundar
7.	ஒட்டர்	Oddar
8.	சொலி (கண்ணைச் சொலிக்கிறது என்பது வழக்கு)	ஜொலி
9.	சுவடி அல்லது சோடி (சுவடியாய்ப் போளுர்கள் அல்லது சோடியாய்ப் போளுர்கள் என்பது வழக்கு)	ஜோடி
10.	சோலி	ஜோலி

தவருன பலுக்கல் முறை ஒழியவேண்டும். இதற்கு நம் பணி தொடரவேண்டும்.

மக்களுக்குச் சொன்னுல் புரியாது என எந்த ஒரு சொல்லைப் பற்றியும் முடிவு செய்துவிட வேண்டாம். மக்கள் என்போர் தமிழ் மக்களே. அவர்களுக்காகவே நாம் இந்தத் தனித்தமிழ்க் காப்பு முயற்சியிலீடுபட்டுள்ளோம். மக்கள் மாற்றத்தை ஏற்றுக் கொண்டுதான் வருகிருர்கள். அன்றைய சரித்திரம் இன்றைய வரலாறு; பூகோள சாஸ்திரங் கூடப் புவியியலாயிற்று. அன்று சர்க்கார் இன்று அரசு. Bus இன்று பேருந்தாக ஓடுகிறது. மந்திரி கூடப் பெரும்பாலும் அமைச்சராகிவிட்டார். ஒன்றை அரசினர் வழக்கில் ஏற்ருல் மக்கள் எதிர்ப்பதில்லை என்பதே உண்மை. எனவே, மக்களைக் குறை சொல்லல் வேண்டாம்.

எனவே, அருள்கனிந்து தமிழின் சீர்மை கெட்டுவிடும்படி யான ஒலியமைப் பெழுத்துகளை வழக்கிற்கொண்டு வாவேண் டாம் எனவும், உ.த.மு. கழக நெறி முறைகளில் இம்மாதிரியான ஒரு சூழ்வை வைக்கவேண்டாம் எனவும் அன்புடனும், பணி வுடனும், உரிமையுடனும் வேண்டிக் கொள்கிறேன். பிற பின்.

நன்றி ! தங்கள் அன்புள்ள,

--கி. இளஞ்சேரல் முதுபாண்டியன், மேலாளியாறு.